கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை

17-9-72

30 காசு



தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...



50 F-363 TM



கோகுலம்

பரிதாபி, புரட்டாசி 1
செப்டம்பர் 17, 1972
மலர் 1 :: இதழ் 11



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும்

— பாரதியார்

சந்தா விவரம்:
தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
இலங்கை ரூ. 9-00
(இலங்கை நாணயப்படி)
இதர நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

அட்டைப்படச் சிறுமிகள்:

நவராத்திரி அழைப்புக்கு நாங்க
ரெண்டு பேரும் ரெடி.

வண்ணப் படம்: வித்யாவ்ரதா





AIYARS-C.165 TM

ஆத்திசூடி

ராஜாஜி



கௌவையகற்று

கௌவை அல்லது கவ்வை — பழிச் சொல், பிறரைப் பழித்துப் பேசும் வழக்கம் வேண்டாம். தன் குற்றம் தனக்குத் தெரிய மாட்டாது. பிறர் குற்றங்கள் எப்போதும் ஒருவனுக்குப் பெரிதாகவே தோன்றும். அவைகளை எடுத்துக் காட்டிப் பேசுவது சிறியோர் சுபாவம். அதை உன் வழக்கமாகச் செய்து கொள்ளாதே.

சக்கர நெறி நில்

சக்கர நெறி என்பது தேசம் முழுவதும் ஒப்புக் கொண்ட அரசும் அதன் சட்டங்களும். அதற்கடங்கி நடப்பாயாக. பொது நன்மைக்காக எல்லாரும் ஒப்புக் கொண்ட விதிகளுக்கு மாறுபாடாக உன் சுயநலமோ அல்லது வேறு காரணங்கொண்டோ நீ எதுவும் செய்யக் கூடாது.

சான்றோரினத்திரு

நல்ல குணமுடையவர் சகவாசம் செய். சான்றோர் என்றால் சால்புடையவர். சால்பு என்றால் அறிவு நிறைந்து சுக துக்கங்களால் கலக்கப்படாமலிருக்கும் குணம். நல்ல சகவாசத்தால் நம்முடைய குணம் நமக்குத் தெரியாமலே தானாகத் திருத்தப்படும். அப்படியே சிறுமைக் குணமுடையவர் சகவாசம் நம்மையும் கெடுக்கும்.

சித்திரம் பேசேல்

பிறரை மகிழ்விப்பதற்காக மெய்போலத் தோன்றும் பொய்யைப் பேசாதே. இது முதலில் மகிழ்ச்சி தரும் விளையாட்டாகத் தோன்றும். ஆனால் பல தீமை உண்டாகும்.

சீர்மை மறவேல்

சீர்மை : கீர்த்தி.

கீர்த்தி தரும்படியான செயல்களை உனக்குச் சமயம் வாய்த்த பொழுது செய்யாமல் விட்டு விடாதே. தற்காலப் பிரயோஜனமாகவே, குடும்ப வாழ்வுக்கு வேண்டியதையே செய்து உன் வாழ்நாள் முடிப்பது போதும் என்று இராதே. நல்ல புகழ் பெறும்படியான செயல்கள் செய்ய வேண்டும். அப்படி செய்வதற்குத் தகுந்த சமயம் நேரிட்டால் விட்டு விடாதே.

கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

கோபிகைகள் கண்ணனைப் பற்றிய குற்றச்சாட்டுகளை யசோதையிடம் கூறியதும் கிருஷ்ணர், "என்னைப் பெற்ற முன்னறி தெய்வமான அன்னையே! நீ மகாராணி. ஒருவர் வார்த்தையைக் கேட்டு முடிவுகட்டக் கூடாது. நன்கு தீர்க்காலோசனை செய்து முடிவு செய்வது உத்தமம். நான் இல்லை என்கின்றேன். இவள் உண்டு என்கின்றாள். கையும் பிடியுமாகப் பிடித்துக் கொண்டு வந்தால் நீ என்னைத் தண்டனை செய். இதுதான் நியாயம். பிள்ளை என்று என் பக்கம் சேர்ந்து பாரபட்சமாக நீ தீர்ப்பு கூறக் கூடாது" என்றார்.

"உன்னைக் கையும் களவுமாகப் பிடிக்கவில்லையானால் நான் மதுகரவேணியா?" என்று ஓர் இளங் கோபிகை தலையை அசைத்தாள். கிருஷ்ணர் தாய்க்குப்பின் நின்று ஆள் காட்டு விரலை அசைத்து நையாண்டி செய்தார்.

மறு நாள் மதுகரவேணி தயிர் கடைந்து வெண்ணெயை உருட்டி வைத்துவிட்டுக் கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தாள்.

கிருஷ்ணர் மெல்ல மெல்லப் பதுங்கிப் பதுங்கி அவள் வீட்டுக்குப் போய் வெண்ணெயை அள்ளி அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தார்.


கதவுக்குப்பின் ஒளிந்திருந்த மதுகரவேணி ஓடி வந்து கிருஷ்ணரைப் பிடித்துக் கொண்டாள். "திருட்டுக் கிருஷ்ணா! உன் உருட்டுப் புரட்டு எல்லாம் என்னிடம் பலிக்குமா? அகப்பட்டுக் கொண்டாயா? வா! உன் அம்மாவிடம் கொண்டு போய் உனக்கு உதை வாங்கித் தருகின்றேன்!" என்றாள்.

கிருஷ்ணர், "வாடி உன்னைப் பிடித்துக் கொண்டு போகலாம் என்றுதான் நான் வந்தேன். வா!" என்று கூறிச் சிரித்தார்.

மதுகரவேணி கண்ணனை வெண்ணெயும் கையுமாகப் பிடித்துக்கொண்டு நடந்தாள். மற்றக் கோபிகைகள் தேர்வடம் பிடித்ததுபோல் தொடர்ந்தார்கள்.

யசோதையின் வீட்டில் நுழைகின்ற போது, கிருஷ்ணர், "மது! நீ என் சின்னம்மா மாதிரி இருக்கின்றாய். நீ என்னைக் காட்டிக் கொடுத்தால் என் அம்மா அடிப்பாள்; விரல்களை ஒடிப்பாள். சின்னஞ்சிறு பிள்ளையை அடிபட வைத்த பாவம் உனக்கு வரும். அதனால் ஏழு பிறப்புக்களுக்கு உனக்குப் பிள்ளை பிறக்காது. நீ நல்ல அம்மா! விட்டு விடு" என்று கெஞ்சிக் கூறினார்.

மதுகரவேணி, "ம்.... இப்போது என்னைக் கெஞ்சிக் கெஞ்சி வேண்டுகின்



ருயா? பிள்ளை பிறக்காது என்று சாபம் கொடுக்கின்ருயா? உன்னை விட மாட்டேன்'' என்ருள்.

கிருஷ்ணர், ''மது! சரி, சரி. என்னைக் காட்டிக் கொடுத்தால் எங்கம்மா என்னை ஓர் அடி அடிக்கப் போகின்ருள். அடித்தால் என்ன? அடித்துத் துவைத்த வேட்டிதானே வெண்மை ஆகின்றது? வளைத்த மூங்கில்தானே பல்லக்கில் மன்னவன் மணி மகுடத்துக்கு மேலே விளங்குகிறது? ஆமாம், உன் கன்னத்தில் கரி இருக்கிறதே. அது விகாரமாக இருக்கின்றது'' என்ருர். அவள் முந்தானையால் துடைத்தாள்.

கிருஷ்ணர், ''ஐயய்யே! கரி அதிகமாகப் பரவி விட்டது. குனி, நான் துடைத்து விடுகிறேன்'' என்ருர். அவள் நிஜம் என்று நம்பிக் குனிந்தாள். கையிலும் வாயிலும் இருந்த வெண்ணெயை அவள் வாயில் தடவி விட்டு, ''அம்மா! அம்மா! இங்கே ஓடி வா! நேற்று இவள் என்னைப் பிடித்து வருகிறேன் என்ருளே! இப்போது நான் இவளைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். வந்து பார்'' என்று உரக்கக் கத்தினுர். தர்ப்பைக் கொடி போன்ற யசோதை வந்து பார்த்தாள்.

''அம்மா! இவள் கணவனுக்குத் தெரியாமல் வெண்ணெயைத் தின்னுட்டு என் பேரில் பழி போடுகின்ருள். இவள் வாயில் வெண்ணெயைப் பார்'' என்ருர்.

யசோதை, ''அடியே! நீ தின்றுவிட்டு என் மகன் மீது பழி சுமத்துகின்றனையா?'' என்ருள்.

மதுகரவேணி, ''அம்மா! உன் மகன் மகா மாயாவி. அவன் வாயில் இருந்த வெண்ணெயை எடுத்து என் வாயில் தடவி விட்டான்'' என்ருள்.

கிருஷ்ணர், ''அம்மா! இவள் பேசுவது சுத்தப் பொய். இவள் அஞ்சடி உயரம். நான் சின்னஞ் சிறு பாலகன். இவள் வாய் எனக்கு எட்டுமா?'' என்ருர்.

பொய்யுடை யொருவன்
சொல் வன்மையினுல்
மெய் போலும்மே
மெய் போலும்மே


என்றபடி யசோதை கிருஷ்ணருடைய சொல்லையே நம்பினுள்.

இந்த நிகழ்ச்சி நிகழும்போது திருக் கயிலாய மலையில் சிவபெருமான் சிரித்தார். உமா தேவியார், ''ஏன் சுவாமி காரணமின்றிச் சிரிக்கின்றீர்?'' என்று வினவினுர்.

சிவமூர்த்தி, ''தேவி! தெய்வத்துக்குப் பழமும் பாலும் பட்சணமும் படைத்து அழுது தொழுது துதித்து முனிவர்களும் பெரியோர்களும் நாம் படைத்ததைத் தெய்வம் ஏற்றுக் கொள்ளாதா என்று ஏங்கி நிற்கின்ருர்கள். ஆயர்பாடியில் தெய்வம் குழந்தை வடிவில் நின்று விளையாடுகிறது. கோபிகைகளின் முன் செய்த தவத்தால் பால், தயிர் வெண்ணெய் உண்ணுகின்றது. தெய்வம் உண்ணுகின்றதென்று உணராத கோபிகைகள் வருந்தி அங்கலாய்க்கின்ருர்கள். இது என்ன மடமை என்று புன்னகை பூத்தேன்'' என்று அருளிச் செய்தார்.

இவ்வாறு யசோதையிடம் குறை கூறிய கோபிகைகள் நாணிக் கோணித் திரும்பினுர்கள்.

(தொடரும்)



கலீனா அழகான சிறுமி. அவளுக்குப் பத்து வயதுதான் இருக்கும். மிக மிக இரக்க சிந்தை உடையவள். பிறர் துன்பத்தைக் காணச் சகியாதவள். தன்னைத் துன்பப்படுத்திக் கொண்டாவது பிறருக்கு உதவி செய்வாள். இவளது கருணை உள்ளத்தைக் கண்டு வியக்காதவர்கள் இல்லை. அந்த ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லாரும் அவளை வாழ்த்தாத நாள் இல்லை.

அவள் வசித்து வந்தது பாலைவனப் பிரதேசம். அடிக்கடி வெயிலின் கொடுமையால் புல், பயிர்கள் யாவும் கருகிப் போய்விடும். தண்ணீர் வற்றிவிடும். பிராணிகள் தண்ணீர் இல்லாததால் இறந்துவிடும்; ஏன், மனிதர்கள்கூடத் தான்!

அந்த வருடம் கலீனாவின் சித்திக்குக் கல்யாணம். அவள் பாலைவனத்தை அடுத்த பகுதியில் வசித்து வந்தாள். அவள் ஊரை அடையப் பாலைவனத்தை மூன்று நாட்கள் ஒட்டகத்தின் மூலம் கடந்தாக வேண்டும். கலீனா தன் பெற்றோர்களுடன் பயணமானாள்.

ஒரு நாள் பயணத்துக்குப் பின் நல்ல வெய்யில் நேரம். ஈனமான குரல் அவள் செவியில் விழுந்தது. அந்தக் குரல் வந்த திக்கில் நோக்கினாள். ஒரு கிழவன் விழுந்து கிடந்தான். உடனே அவள் ஒட்டகத்திலிருந்து குதித்தாள். இதைக் கண்ட தந்தை ''கலீனா! இந்தக் கடும் வெய்யிலில் மண் உன் பாதங்களைச் சுட்டுப் பொசுக்கிவிடும். இறங்காதே'' என்று கத்தினான்!


''அப்பா! என் பாதங்கள் புண்ணாவது இருக்கட்டும்! அந்தக் கிழவர் உடம்பெல்லாம் புண்ணாகி விடாதா? நான் உதவத்தான் போகிறேன்'' என்று ஓடினாள். பாதங்கள் கொப்பளித்து விட்டன. கிழவரைத் தூக்கிப் பிடித்தாள். அவரது வாய், 'தண்ணீர்' 'தண்ணீர்' என்று முணுமுணுத்தது. அவள் தன்னிடமுள்ள தோல் பையிலிருந்த அத்தனை தண்ணீரையும் வாயில் ஊற்றினாள். கிழவர் பிழைத்துக் கொண்டார். அவளுக்கு மகிழ்ச்சி. கிழவரைத் தூக்கிக் கொண்டு ஒட்டகத்திடம் வந்தாள்.

அவளது தந்தை, ''நீ எல்லாத் தண்ணீரையும் அவனுக்குக் கொடுத்துவிட்டாயே! நாம் வழியில் தண்ணீர் இன்றிச் சாவதா?'' என்று கத்தினார்.

கலீனாவின் கண்கள் பனித்தன. ''அப்பா! அவர் உங்கள் தந்தையின் வயதை ஒத்தவர். அவருக்கு நாம் உதவி செய்யா விட்டால் அவர் இறந்து விடுவார். துன்பத்தில் இருப்பவனுக்குக் கருணை காட்டு என்று நம் மதம் சொல்லியிருப்பதாகத் தாங்கள்தானே எனக்குச் சொல்லிக் கொடுத்தீர்கள்! நான் அதைத்தான் செய்தேன்'' என்றாள்.

''கிழவன் மீண்டும் ''தண்ணீர்! தண்ணீர்!'' என்று கத்தினான். கலீனா வேகமாகத் தன் தந்தையின் தண்ணீர்ப் பையை எடுத்துக் கிழவர் வாயில் தண்ணீரை ஊற்றினாள். அடுத்த இரண்டு நாட்களுக்காக வைத்திருந்த தண்ணீர் முழுவதையும் குடித்து விட்டுக் கிழவன் எழுந்து நின்றான்!

''சைத்தான் பெண்ணே! இரண்டு நாட்களுக்கு வைத்திருந்த தண்ணீரையெல்லாம் கொடுத்து விட்டாயே! நாம்



ப்படிப் பாலைவனத்தைக் கடப்பது?'' ன்று கத்தினார் தந்தை.

''அப்பா! இறைவன் அருளால் நாம் ாலைவனத்தைக் கடப்போம். பயப் 'டாதீர்கள்!'' என்றாள்.

கிழவனைத் தன் ஒட்டகத்தில் ஏற்றிக் கொண்டாள். கிழவன் நன்றியுடன் லீனாவைப் பார்த்தான். கலீனாவுக்கு கிழ்ச்சி பொங்கியது.

திடீரென மண் புயல் ஆரம்பித்தது. ண் புயல் மேடிட்டுக் கொண்டே வந் து. ஒட்டகம் தவித்தபடி சமாளித்து டந்து கொண்டிருந்தது. ஒரே இடத் ல் நின்றால் மண் மேட்டின் அடியில் க்கி மடிய வேண்டியதுதான்! மண் யல் நின்றவுடன் எல்லோரும் 'தண் ணீர், தண்ணீர்' என்று அலறினார்கள். லீனாவின் நாவும் வறண்டு கிடந்தது.

''கலீனா! நான் தாகத்தால் துடிக் கிறேன்! எங்கே இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்றாயே! பார், நம் நிலையை!'' என்றார் தந்தை.

''அப்பா! இறைவன் நம்மைக் காப் பாற்றுவார்!'' என்றவள் மண்டியிட்டு வானத்தை நோக்கிக் கைகூப்பினாள்.

''தெய்வமே! எங்களைக் காப்பாற்று!'' என்று மனமுருக வேண்டினாள்.

''கலீனா! தெய்வம் உன் அருகிலேயே இருக்கும்போது நீ ஏன் ஆகாயத்தில் தேடுகிறாய்?'' என்ற குரல் கேட்டுத் திரும்பினாள்.

கிழவன்தான் சிரித்தான்.

''அதோ அந்த மேட்டுக்குப் போ! மணல் மேட்டை உன் காலால் உதை! தண்ணீர் பெருக்கெடுத்தோடும்!'' என்றான்.


கலீனா ஓடினாள். மணல் மேட்டைத் தன் காலால் உதைத்தாள்! 'ஜில்'என்ற தண்ணீர் பீச்சிக் கொண்டு வந்தது! கலீனாவின் கண்கள் ஆச்சரியத்தினால் விரிந்தன. அள்ளி அள்ளிப் பருகினாள் தண்ணீரை. எல்லோரும் தண்ணீர் ஊற்றையும் கிழவனையும் பார்த்தார்கள்.

கிழவன் இருந்த இடத்தில் உடனே அழகிய தேவ தூதன் தோன்றினான்.

''கலீனா! முன் காலத்தில் இங்கே கொடியவர்களும் தீயவர்களும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களை அழிக்கவே, இந்த இடத்தைப் பாலைவனமாக்கினேன். உன் கருணை உள்ளத்தைப் பற்றி அறிந்தேன். உன்னைச் சோதிக்கவே கிழவனாக வந்தேன். உன் உண்மையான கருணை உள்ளத்தைக் கண்டேன். உன்னைப் போன்ற ஒருத்தி இருக்கும்வரை இந்தப் பூமி, நதிகளாலும் சோலைகளாலும் அழகுபடும்'' என்று கூறித் தேவ தூதன் மறைந்து விட்டான்!

சில வினாடிகளில் அந்த இடம் ஓர் அழகிய கிராமமாக மாறியது. சோலைகளும் நந்தவனங்களும் சூழ்ந்திருந்தன. அந்தக் கிராமத்தை யொட்டிச் சலசலத்து ஓடியது ஒரு நதி.

கலீனாவின் பெற்றோர் தங்கள் மகளின் உயர்ந்த செய்கையைக் கண்டு பெருமை கொண்டனர். அது மட்டுமா? செய்தி அறிந்த ஊரார் கலீனாவைப் பாராட்டியதோடல்லாமல் அந்த இடத்துக்குக் 'கலீனாச் சோலை' என்றே பெயரையும் வைத்து விட்டனர்!



தெரிந்து கொள்ளுங்கள் :

நாளைக் கணக்கிட்டது எப்படி ?

நாம் தினசரி காலண்டரைப் பார்த்து அன்று என்ன நாள் என்று தெரிந்துகொள்கிறோம். அப்படி நமக்கு உதவும் அந்தக் காலண்டரின் வரலாறு நமக்குத் தெரியவேண்டாமா ?

காலண்டர் எப்படி வருடத்தைக் குறிக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். பூமி தன்னுடைய அச்சில் 23 மணி 56 நிமிடங்களுக்கு ஒரு முறை சுழலுகிறது. இதை ஒரு நாள் என்கிறோம். நாம் ஒரு வருடத்தை எடுத்துக் கொண்டால் அதில் வசந்த காலம், கோடை காலம், இலையுதிர்காலம், குளிர் காலம் என நான்கு காலங்கள் இருக்கின்றன. பூமி சூரியனைச் சுற்றி வரும்போது, பூமியின் ஒரு பாதி சூரியனை நோக்கியும் மறு பாதி சூரியனின் கிரணங்கள் படாதபடியும் இருப்பதால் இரவும் பகலும் பருவ காலங்களும் ஏற்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எகிப்தியர்கள் ஒரு வருடத்துக்கு 360 நாட்கள் எனக் கணக்கிட்டிருந்தனர். ஆனால் நைல் நதியின் வெள்ளப் பெருக்கைக் காலத்தால் அளவிடும்போது, அவர்கள் தங்களது கணக்கு தவறு என உணர்ந்தனர். அவர்கள் அந்த நதியின் வெள்ளப்பெருக்கு சிரஸ் (Serius) என்னும் நட்சத்திரம் சூரிய உதயத்துக்கு முன்பு வானத்தில் தோன்றும் நேரத்தில் ஏற்படுகிறது என்பதை உணர்ந்தனர். ஆனால் காலத் தோற்றத்தின் இடைவெளி அதிகமாக இருந்ததால் எகிப்தியரின் காலண்டரைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

அமெரிக்கக் கண்டத்தில் வசித்து வந்த 'மாயா' என்ற இனத்தினர் வீனஸ் என்ற கிரகத்தின் அசைவுகளை வைத்துக் கொண்டு வருடத்தை உருவாக்கினர். இவர்கள் ஒரு வருடத்தை இருபது நாட்கள் கொண்ட 18 மாதங்களாகப் பிரித்தனர். பிறகு இவற்றுடன் ஐந்து நாட்களைச் சேர்த்தனர். இந்த ஐந்து நாட்களும் துரதிருஷ்ட நாட்களாகக் கொள்ளப்பட்டன. மாயா இனத்தவரோடு இவர்களுடைய காலண்டரும் அழிந்து விட்டது.

நாம் இன்று பயன்படுத்தும் காலண்டர் ரோமன் காலண்டர் ஆகும். முதலில் தோன்றிய ரோமன் காலண்டரில் ஒரு வருஷத்துக்கு 304 நாட்கள் இருந்தன. இவை பத்து மாதங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பிறகு இவற்றுடன் இரண்டு மாதங்கள் சேர்க்கப்பட்டன. ஆனால் இந்த முறை சரியாக இல்லாததால் ரோமாபுரியை ஆண்ட ஜூலியஸ் சீஸர் கி.மு. 44ல் இந்த முறையை மாற்றி அமைத்தான். இதை மாற்றி அமைக்க ஸீஸர், ஸோஸி ஜீனஸ் (Sosigenes) என்பவரின் உதவியை நாடினான். அப்படி அமைக்கப்பட்ட காலண்டர்தான் 'ஜூலியன் காலண்டர்' ஆயிற்று.

ஸோஸி ஜீனஸுக்கு ஒரு வருடத்துக்கு 365¼ நாட்கள் என்பது நன்கு தெரியும். ஆனால் அவர் ஒரு வருடத்தின் நாட்கள் முழு எண்ணாக வர வேண்டுமென்று மொத்த நாட்கள் 365 எனக் கணக்



கெடுத்தார். இந்த முறையில் ஒவ்வொரு வருடத்திலும் ஒரு நாளின் கால் பங்கு குறைகிறது. நான்கு வருடங்களில் இந்த நான்கு கால் பங்குகள் சேர்ந்து ஒன்றாக அதாவது ஒரு நாளாகிறது. ஸோஸி ஜீனஸ் அந்த ஒரு நாளையும் கணக்கில் சேர்த்துக் கொள்ள விரும்பினார். அந்த நாள் கணக்கில் சேரும் வருடம், 'லீப் வருட'மாயிற்று.

இந்த ஜூலியன் காலண்டர் பார்ப்பதற்குச் சரியாக இருந்தாலும் அதிலும் ஒரு சிறு தவறு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதன்படி காலண்டர் வருடம் 11 நிமிடங்கள் 14 வினாடிகள் அதிகமாக உள்ளதென்று கண்டு பிடிக்கப்பட்டது. இது ஒரு பெரிய தவறு இல்லை என்றாலும் 128 வருடங்களில் அது ஒரு முழு நாளாகக் கணக்கிடப்படுகிறது.

போப் பதின்மூன்றும் கிரகரி (Gregory) இதைத் திருத்த முயற்சி செய்தார். வான சாஸ்திர நிபுணரான க்ளாவியஸ் (Clavius) என்பவரின் ஆலோசனைப்படி கிரகரி 400 வருடங்களில் 100 லீப் வருடங்களுக்குப் பதிலாக 97 லீப் வருடங்கள்தான் இருக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

சிலர் 'உலக காலண்டர்' என்ற ஒன்றை உருவாக்க வேண்டும் என்று விரும்பினர். இதன்படி ஒருவருடம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும். ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் முதலிய மாதங்கள் ஞாயிற்றுக் கிழமையில் ஆரம்பிக்கும். இவை ஒவ்வொன்றும் முறையே 31 நாட்கள் கொண்டது. மற்ற மாதங்கள் 30 நாட்கள் கொண்டது. மொத்தம் இப்போது 364 நாட்கள் ஆயிற்று. மீதமுள்ள ஒரு நாள் 'உலக தினம்' என அழைக்கப்படும். இந்த முறைப்படி ஜனவரி 2ந் தேதி எப்போதும் திங்கட்கிழமையாகவே இருக்கும், ஆனால் இந்த முறை சரியான வரவேற்பைப் பெறாததால் இதை யாரும் பின்பற்றுவதில்லை.

—வஸந்தா



நவராத் திரியாம் திருவிழா!
நன்மை பயக்கும் பெருவிழா!
உவகை யூட்டும் புதுவிழா!
உலகத் திற்கே பொதுவிழா!
பொம்மை யுலகம் போகலாம்!
புதுமை பலவும் காணலாம்!
நம்மை மறந்து சிரிக்கலாம்!
நாமெல்லோரும் களிக்கலாம்!
இயற்கை யழகின் உயர்வினை
எடுத்தி யம்பும் பொம்மைகள்!
செயற்கை வண்ணப் பொம்மைகள்
சின்னஞ் சிறிய பொம்மைகள்!
வனத்தில் வாழும் விலங்குகள்
வனப்பைக் காட்டும் பொம்மைகள்!
கனவோ நனவோ என்றுநாம்
கண்டு வியக்கும் பொம்மைகள்!

நடனப் பொம்மை காணலாம்!
நாமும் கூடிடலாம்!
படகில் ஏறிச் செல்லலாம்!
பட்டி னத்தைப் பார்க்கலாம்!
தெய்வம் எங்கே என்பவர்
தேர்ந்து தெளியும் வகையிலே,
மெய்யை உணர்த்தும் பொம்மைகள்
மேன்மை எல்லாம் விளங்குமே!
''டும்டும், டுடும்டும்'' மேளமும்,
''டிங்டாங், டிடிங்டாங்'' தாளமும்
நம்பிக்கையை ஊட்டுமே!
நாத சுரமும் கேட்குமே!
எங்கள் வீட்டுக் கொலுவினை
இன்றே காண வருகவே!
எங்கள் வீட்டு விருந்திலே
இனிப்புத் தின்று மகிழ்கவே!



போட்டோ: என். ராமகிருஷ்ணு



பலே சுண்டெலி

"அம்மா! என் சின்ன அண்ணனை எங்கேயம்மா, காணோம்?'' என்றது சின்னச் சுண்டெலி.

''இன்னிக்குக் காலையிலே அதைப் பூனை பிடித்துக் கொண்டு போய்விட்டது'' என்றது தாய்ப் பூனை.

''ஐயையோ! நேற்றுத்தான் என் தங்கச்சியைக் கொண்டு போயிற்று. இன்னிக்கு அண்ணனையும் பிடித்துக் கொண்டு போயிடுத்தா? ஏம்மா, நாம பூனைகிட்டேயிருந்து தப்பிக்க வழியே இல்லையா?'' என்று கேட்டது சுண்டெலி.

''ஒரே வழிதான் இருக்கு. பொந்துக்குள்ளே அடைஞ்சிண்டு இருக்கணும். அப்படி இருக்கவும் முடியலியே! ஆகாரத்துக்கு வெளியே போய்த்தான் ஆக வேண்டியிருக்கு.''

''பூனை இல்லாத சமயம் பார்த்து வெளியே போய் வரணும், இல்லையா அம்மா?''

''பூனை இருக்கா இல்லையான்னு நமக்கெப்படித் தெரியும்? உனக்கு ஒரு கதை சொல்லட்டுமா? எலியெல்லாம் சேர்ந்து தீர்மானம் பண்ணித்தாம், பூனையின் கழுத்திலே மணியைக் கட்டி விட்டால் பூனை வரும்போது சத்தம் கேட்கும்; நாமெல்லாம் ஓடிப் போய்த் தப்பிக்கலாம் அப்படீன்னு. பூனைக்கு யாரு மணி கட்டறது? கட்டப் போகும் போது அந்த எலியையே பூனை தின்னுடுமே!''

துயரத்தையும் மறந்து இரு எலிகளும் சிரித்தன. சின்ன எலி யோசனை செய்தது. துணிச்சலோடு வெளியே மாட்டுக் கொட்டகைக்குச் சென்றது. அங்கு மாட்டின் சதங்கையிலிருந்து ஒரு மணியை எடுத்து வந்தது. தன் பொந்துக்குள் செல்லாமல் பூனைக்காகக் காத்திருந்தது. தன் உயிரைக் கொடுத்தாவது பூனையின் கழுத்தில் மணியைக் கட்டிவிட்டால் மற்ற எலிகளாவது தப்பிப் பிழைக்கட்டுமே என யோசனை செய்தது.

சிறிது நேரம் கழித்துப் பூனை அங்கு வந்தது. சுண்டெலி சிறிதும் பயப்படாமல் பூனையின் முன்னே சென்றது. சுண்டெலியின் தைரியத்தைப் பார்த்துப் பூனை ஆச்சரியப்பட்டது. அந்த ஆச்சரியத்தில் பூனை, சுண்டெலியைப் பிடிக்க வேண்டும் என்பதைக்கூட மறந்து விட்டது. அப்போது சுண்டெலி மணியை ஆட்டிக் 'கிணிங் கிணிங்' என ஒலி எழுப்பியது.

பூனை ஆச்சரியத்துடன், ''நீ கையில் என்ன வைத்திருக்கிறாய்?'' என்றது.


சுண்டெலி, ''பூனை அண்ணா! இது மாட்டின் சலங்கை மணி. இதைக் கட்டிக் கொண்டு நடந்தால் 'கிணிங், கிணிங்' என இனிமையாய் ஒலிக்கும். நான் கட்டிக் கொண்டு நடக்கலாம் என எண்ணினேன். மணி ரொம்பப் பெரிசா இருக்கு. அதனாலே இதை என் கழுத்திலே கட்டிக்க முடியல்லே. நீங்கள் இதைக் கட்டிக் கொண்டு பார்க்கிறீர்களா? ரொம்ப ஜோரா இருக்கும்'' என்றது.


ஆசை யாரைத்தான் விட்டது? பூனைக்கும் ஜோராய் இருக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. ''சரி, கட்டிவிடு'' என்று எலியிடம் குனிந்து கழுத்தை நீட்டியது பூனை.

சுண்டெலி பூனையின் கழுத்தில் மணியைக் கட்டியது. ''கொஞ்சம் அந்தக் கோடி வரையில் சென்று வாருங்கள். எப்படி இருக்கு, பார்க்கலாம்'' என்றது எலி. ''இங்கேயே இரு!'' என்று கூறியவாறே ஒய்யாரமாய் நடந்தது பூனை. அதுதான் சமயம் என்று தப்பிச் சென்றது எலி.

''ஏன் இப்போதெல்லாம் எலிகள் என் கண்ணில் படமாட்டேன் என்கின்றன'' என்று விழிக்கின்றது அந்த அசட்டுப் பூனை.


"கிட்டு மாமா"





இது ஏதோ மாடர்ன் ஆர்ட் ஓவியம் என்று மிரளாதீர்கள். உற்றுப் பார்த்தால் கண்ணனின் வண்ண முகம் தெரிகிறதல்லவா? அது மட்டுமல்ல. இதில் இன்னொரு மர்மமும் அடங்கியிருக்கிறது. உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள். முடியவில்லையே? அப்படியானால் படத்தின் நான்கு மூலையிலும் சிறிய முக்கோணம் இருக்கிறதில்லையா? அந்த A—B C—D முக்கோணங்களை ஒன்றையொன்று தொடும்படி இந்தப் பக்கத்தை மடியுங்கள். என்ன தெரிகிறது இப்போது? நான் சொல்லமாட்டேன்.

— எஸ். நாதன்




பிரபல வீணை வித்வான் எஸ். பாலசந்தர் அவர்களின் வீணைக் கச்சேரியைக் கேட்டு ரசித்திருப்பீர்கள். ஆனால் அவர் தன் பெயரை எப்படி எழுதிக் கையெழுத்திடுகிறார் என்று தெரியுமா உங்களுக்கு? அதுவும் வீணையைப்போலவேதான் இருக்கும். அவர் கையெழுத்துக்கு மேலே ஒரு வீணையை வரைந்து காட்டி இருக்கிறோம் பாருங்கள்.




இங்கிலாந்து ராணியார் எலிஸபெத்துக்கும் பிடித்தமான தவளையார் இவர். தவளை வேஷம் போட்டுக் கொண்டு ஆடுபவர் ஜெரேமி ஃபிஷர். இந்தத் தவளையாட்டம் ராணி எலிஸபெத்தின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டதாம்.

— ஆர். லலிதா

அப்படியா?



1. உருளைக் கிழங்கு பயிரிடப்பட்ட புதிதில் உருளைக் கிழங்கைச் சாப்பிடக்கூடாது என்று ஸ்காட்லாந்தில் கடுமையான எதிர்ப்பு இருந்தது!




2. ஒருவனின் மீது ஒரு சதுர அங்குலத்துக்கு ஒரு டன் எடை அழுத்தத்தைச் செலுத்தினால் உயிரோடு இருக்க முடியுமா? முடியாது! ஆனால், ஆழ் கடலில் ஒரு மைல் ஆழத்துக்குக் கீழ் வாழும் மீன்களின் உடலைக் கடல் நீர் ஒரு சதுர அங்குலத்துக்கு ஒரு டன் எடை வீதம் அழுத்திக் கொண்டிருக்கிறது! எனினும் அந்த மீன்கள் சாவதில்லை! ஆனால், அந்த மீன்களை மேலே கொண்டு வந்தால் நீரின் அழுத்தக் குறைவின் காரணமாகவே இறந்து விடுகின்றன!

3. வானம் என்ன நிறம் என்று கேட்டால் உடனே நீல நிறம் என்பீர்கள். ஆனால், வானவெளியிலிருந்து பார்க்கும்போது வானம் கறுப்பு நிறமாகத்தான் தெரியும்! சூரிய ஒளியைக் காற்றில் அணுக்கள் சிதறடிப்பதாலேயே வானம் நீல நிறமாகத் தோன்றுகிறது. சுமார் நூறு மைல்களுக்கு மேல் வானவெளியில் சூரிய ஒளியைச் சிதறடிப்பதற்குக் காற்று இல்லை. எனவேதான் அங்கே வானம் கறுப்பு நிறமாகத் தோன்றும்!




4. எறும்புகள் தூங்குவதேயில்லை! பிறப்பு முதல் இறப்பு வரை அவை விழித்துக் கொண்டேதான் இருக்கின்றன. அவற்றின் ஆயுட் காலம் சுமார் ஐந்து ஆண்டுகள். அந்த ஐந்து ஆண்டுகளும் அவை தூங்குவதேயில்லை. அது மட்டுமல்ல, அவை சுமார் ஐம்பது முதல் நூறு நாட்கள் வரை ஆகாரமின்றியும் உயிர் வாழக் கூடும்!





5. மனிதனின் சகஜ உஷ்ண நிலை 98.6' (பாரன்ஹீட்) என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த உண்மையைக் கண்டுபிடித்தவர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த டாக்டர் 'கார்ல் வுண்டெர்லிச்' என்பவர். சுமார் 1,00,000 மனிதர்களைப் பரிசோதனை செய்து இந்த உண்மையைக் கண்டு பிடித்தார் அவர்!



6. 'ஆமை வேகம்' என்று கேலி செய்கிறோமே; தரையில்தான் அப்படி! நீரில் ஆமை எவ்வளவு வேகத்தில் நீந்துகிறது தெரியுமா? மணிக்குச் சுமார் இருபது மைல் வேகத்தில்! இன்னும் ஓர் ஆச்சரியம் என்ன தெரியுமா? திமிங்கிலமும் அந்த வேகத்தில்தான் நீந்துகிறது! அது மட்டுமல்ல, மனிதனின் நீச்சல் வேகமோ மணிக்குப் பத்து மைல்களுக்குள்தான்!

படமும் தகவலும்: ஆழி.

'குடிசையும் கோபுரமும்'

ரொம்ப காலத்துக்கு முன்னாலே ஒரு சின்னக் கிராமத்திலே பழைமையான கோயில் ஒன்று இருந்தது. அந்தக் கோயிலின் கோபுரம் இடிந்துபோயிருந்தது. கோபுரத்துக்கு எதிரே சிறிது தொலைவிலே ஒரு குடிசையும் இருந்தது. அந்தக் குடிசையின் ஓலைகள் கலகலத்துப் போய் மூங்கில்கள் வெளியே தெரியும்படி இருந்தன. அந்தக் குடிசையை யார் கட்டியதோ? எவர் வாழ்ந்தார்களோ? ஆனால் இப்போது அதில் யாரும் இல்லை! அந்தப் பக்கம் மக்கள் நடமாட்டமே கிடையாது. எங்குபார்த்தாலும் செடியும் கொடியும் புதருமாகக் காணப்பட்டன.

கோபுரத்துக்குத் தன் வேதனையை யாரிடமாவது சொல்ல வேண்டும்போல் இருந்தது. சிறிது தொலைவில் உள்ள குடிசையைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள் அதற்கு?

குடிசையிடம் கோபுரம் சிறிது கர்வத்துடன் சொன்னது: இடிந்த நிலையில் இருந்தாலும் அதற்குத் தான் கோபுரம் என்ற கர்வம் போகுமா?

''ரொம்ப காலத்துக்கு முன்னே என்னை ஒரு ராஜா கட்டினாராம். ராஜா என்னைக் கட்டியதாலே என்றாவது ஒரு நாள் எனக்கும் என்னைச் சேர்ந்த கோயிலுக்கும் நல்ல புகழ் கிடைக்கத்தான் போகிறது! ஆனால் நீ அப்படியல்ல! பாவம்......'' என்று நிறுத்தியது கோபுரம் ஏளனமாக.

குடிசைக்குத் தன்னைப் பற்றி நன்றாகத் தெரியும். ''யாரோ எப்பவோ என்னைக் கட்டினாங்க. கொஞ்ச காலம் இதிலே வாழ்ந்திருக்காங்க. பிறகு என்னை இப்படியே விட்டு விட்டுப் போயிட்டாங்க'' என்றது குடிசை மிக அடக்கமாக.

''வேகமா காற்று அடிச்சாலோ அல்லது மழை நீர் வெள்ளமாக வந்தாலோ உன் கதி அவ்வளவுதான்'' என்றது கோபுரம். அதன் வார்த்தைகளில் கர்வம் மின்னியது.


'இந்தக் கோபுரத்துக்கு என்னதான் அதை ராஜா கட்டினாலும் இத்தனை கர்வமா?' என எண்ணியது குடிசை.

குடிசை கோபுரத்தைப் பார்த்தது சலனமின்றி. கோபுரம் கர்வத்தோடு சிரித்தது.

கொஞ்ச நாட்கள் கழிந்தன. கோபுரம் சொன்னது பொய்க்கவில்லை. அந்தப் பகுதியில் ஜனங்கள் நடமாட்டம் அதிகமாகியது. கோபுரத்துக்கும் அந்தக் கோயிலுக்கும் நல்ல காலம் பிறந்து விட்டது. அதைப் பழுது பார்த்துக் கும்பாபிஷேகம் செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். நூற்றுக் கணக்கான தொழிலாளிகள் அந்தக் கோயிலைப் புதியதாக ஆக்கும் வேலையில் ஈடுபட்டார்கள். பாழடைந்து உடைந்து கிடந்த கோபுரமும் கோயிலும் வண்ண வண்ணச் சிலைகள் கொண்ட அழகுக் கோயிலாக மாறிக் கொண்டு வந்தன. இப்பொழுது கோபுரத்துக்கு ரொம்ப ரொம்பக் கர்வம்! சரிந்து, ஓலைகள் போய் மூங்கில்கள் எலும்புக் கூடாகக் காட்சியளித்த குடிசையைப் பார்த்துத் தனக்குள் கர்வச் சிரிப்புச் சிரித்துக் கொண்டது கோபுரம். கேட்பாரற்றுக் கிடந்தது குடிசை.

கோபுரமோ சில மாதங்களில் அழகாக, கம்பீரமாகக் காட்சி அளித்தது. அதனைச் சுற்றியுள்ள கோயிலும் அற்புத

எஸ். வஜ்ரவேலு





மாகக் காணப்பட்டது. கோயிலின் குடமுழுக்கு விழாவுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அந்த விழாவிலே முக்கிய விசேஷம் புகழ் பெற்ற ஒரு மகான், சந்நியாசி, தவயோகி அன்று அங்கு விஜயம் செய்யப் போகிறார் என்பதுதான். இதை அறிந்த கோபுரம் மேலும் கர்வம் கொண்டது. 'மக்களின் அன்புக்கும் பக்திக்கும் பாத்திரரான அந்த மகான் நம்மைத் தாண்டித்தானே கோயிலுக்குள் நுழைய வேண்டும்? அதுமட்டுமா? கோயிலுக்கு வருகிற பக்தர்களெல்லாம் கோபுரமாகிய என்னுள் நுழைந்துதானே போக வேண்டும்' என்று எண்ணியது. குடிசையிடம் இந்த விஷயத்தைக் கர்வத்தோடு சொன்னது கோபுரம்.

குடிசை என்ன செய்யும், பாவம்! கடவுளே என்றிருந்தது. கோயிலைப் புதுப்பிக்கும் தொழிலாளிகள் தங்கி இளைப்பாற இருக்கட்டும் என்று அந்தச் சிதிலமான குடிசையின் மீது புதிய ஓலைகளைப் போட்டு ஓரளவு அதையும் மூடிப் புதுப்பித்திருந்தார்கள். இருந்தாலும் அதனுடைய நிலை பரிதாபமாகவேதான் இருந்தது.

குடமுழுக்குத் தினம் வந்தது. ஆயிரக் கணக்கில் பக்தர்கள் முன்னதாகவே வந்து சேர்ந்து விட்டார்கள். தவத்தினால் உயர்ந்த அந்தப் புண்ணிய புருஷரும், மகானும், துறவியுமான அந்தப் பெரியவர் வருவதற்குப் பாதையை விட்டு விட்டுக் கோபுரத்துக்கு வெளியே இரண்டு பக்கங்களிலும் கூடியிருந்தனர் மக்கள்.

எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட துறவியும் வந்துவிட்டார். கூடியிருந்த பக்தர்களெல்லாம் வரவேற்பு ஒலி எழுப்பினார்கள். அவருடன் கோயிலுக்குள்ளே நுழைவதற்குப் பக்தர்கள் தயாராக இருந்தனர். தமது சிஷ்யர்களோடு வேகமாக வந்து கொண்டிருந்த துறவி கோபுரத்தின் முன்னே வந்து நின்றார். கோயிலை நோக்கித் தலை வணங்கினார். உடனே என்ன நினைத்தாரோ சட்டென்று வந்த வழியே திரும்பினார். தூரத்திலே கேட்பாரற்றுக் கிடந்த குடிசையை நோக்கி நடந்தார். கூடியிருந்த பக்தர்கள் எல்லோரும் குடிசை நோக்கி அவர் பின்னே நடந்தார்கள்.

கோபுரம் விழித்தது. 'நம்மைப் பார்க்க வந்த பக்தர் கூட்டமெல்லாம் எங்கோ போகிறதே! அந்தத் துறவியை அல்லவா பின் தொடர்ந்து போகிறார்கள்! குடிசையை நோக்கியல்லவா போகிறார்கள்!' எனத் தவித்தது கோபுரம்.

புண்ணிய புருஷரான அந்தத் துறவி குடிசையை நோக்கித்தான் நடந்தார். அதன் முன்னே நின்றார். அது மட்டுமா? தலை குனிந்து குடிசைக்குள்ளே நுழைந்தார்! அவருடன் வந்த சிஷ்யர்கள் அவருக்குக் குடிசையினுள்ளே இருக்கை விரித்தார்கள். துறவி அந்த ஆசனத்தில் அமர்ந்து கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார்.

குடிசை ஆச்சரியமுற்றது. 'ஒருவர் கூடத் தங்கியிருக்க முடியாத நம்மிடம், எல்லோருடைய போற்றுதலுக்கும் உரியவரான இந்த மகான் நம்மைத் தேடி வந்து விட்டாரே!... கோபுரத்தையும் கோயிலையும் காணப் போன பக்தர் கூட்டம் கூட அல்லவா அவலமான என்னைச் சுற்றிச் சூழ்ந்து விட்டது! நான் கொஞ்சம் கூட இதை எதிர்பார்க்கவே இல்லை' என்று நினைத்துப் பெருமையுற்றது. கோபுரத்தைப் பார்த்தது, ஆனால் கர்வத்தோடு பார்க்கவில்லை. கோபுரத்தால் குடிசையின் அந்தப் பார்வையைச் சந்திக்க முடியவில்லை. தலை குனிந்தது.

தூய்மையே வடிவான அந்தத் துறவி கண்களை மூடியிருந்தார். அவரது பாதங்களிலே வாசனை மிக்க வண்ண மலர்களும் இனிய மணமுடைய பழங்களும் நிறைந்து விட்டன. அந்தக் குடிசை முழுவதும் அவைகளின் மணத்தினால் நிறைந்தது. இனி அது குடிசையா? இல்லை. புண்ணிய புருஷரான துறவி அமர்ந்திருக்கும் இடம் இனிக் குடிசையாக இருக்க முடியுமா? அருள் கோயில் அது!


சில நிமிஷங்கள் கழிந்தன. துறவி கண்களைத் திறந்தார். சீடர்களிடம் ஏதோ சொன்னார். உடனே வெளியே வந்தார். கோயிலை நோக்கிப் போனார். பக்தர்கள் கூட்டமெல்லாம் அவர் பின் சென்றது.


நாட்கள் சென்றன. துறவி வந்து தங்கித் தியானித்த அந்த இடம்—குடிசை இப்போது பக்தர்களால் புதுப்பிக்கப்பட்டது. புதிய ஓலைகள் வேய்ந்து அதை அழகு படுத்தினார்கள். சுற்றிலும் நந்தவனம் ஏற்படுத்தினார்கள். பக்தர்கள் கூடி அங்கு பகவானுடைய திரு நாமங்களைக் கூறித் துதிக்கும் பஜனை மடமாக மாறியது குடிசை.


இப்பொழுது கோபுரத்தின் கர்வமெல்லாம் மறைந்தது. கோயிலுக்கு வருகின்ற பக்தர்களெல்லாம் முதலில் அந்த மடத்தில் நுழைந்து தியானித்த பிறகே கோயிலுக்குள் நுழைகிறார்கள். இந்த நிலையிலும் கூடக் குடிசை கர்வப்படுவதில்லை.



வீராதி வீரன் — கதை: கௌசிகன் சித்திரம்: ரமணி..




ரஹீம் உள்ளே ஓடினான். காபினில் இருந்த விளக்கை நடுங்கும் கைகளால் ஏற்றிக் கொண்டு வந்தான்...
ரஹீம் பள்ளியில் என்.ஸி.ஸி.யில் கப்பல் படைப் பிரிவில் சேர்ந்து பயிற்சி பெற்றவனாதலால் 'சிக்னல்' பற்றி அறிவான். அது இப்போது பயன் பட்டது.
இருள் படர்ந்து விட்ட வேளையில், நீர்மூழ்கியின் டவரில் நின்று கொண்டிருந்த காப்டன் துறைமுகத்திலிருந்து உள்ளே அல்லது வெளியே வரும் பாகிஸ்தானியக் கப்பல்களைக் கண் காணித்துக் கொண்டிருந்தார். பாதிமூழ்கியபடி பாறையில் சிக்கி நிற்கும் விசைப் படகு அவர் கண்களில் படவில்லை. திடீரென்று மஞ்சள் ஒளி, அறிவிப்புக்களைத் தெரிவித்த போது.....
சீக்கிரம்... சீக்கிரம்... நீர்மூழ்கியின் திசையைத் திருப்புங்கள். அங்கு பாறைகள். ஆபத்து. நல்லவர்கள் யாரோ நமக்கு எச்சரிக்கை 'சிக்னல்' தருகிறார்கள். விரைவாகத் திருப்புங்கள். அப்பாடா! மயிரிழையில் தப்பினோம்.
ரஹீம், ஜிம்மியையும் ஜம்புவையும் சரிப்படுத்தவே நவீன் மேலிருந்து கீழே இறங்கினான்...
உன்னைத் தாக்கியதற்கு மன்னித்துக் கொள். நீயும் என்னைப் போலக் கராச்சி காதகர்களிடமிருந்து ஓடி ஒளிபவன் என்பது எனக்குத் தெரியாது. உன் பையிலிருந்த நோட்டீஸ் நீ யார் என்பதைக் காட்டியபிறகு தான்..
அதனால் என்ன? பரவாயில்லை. இன்று முதல் நாமிருவரும் தோழர்கள்.
ரஹீமும் நவீனும் பேசிக் கொண்டிருந்த போது தடம் கரைக்கு வந்த பாகிஸ்தானிய ரோந்துப் படையினர் தூரத்தில் மினுக்கிடும் வெளிச்சத்தைக் கண்டு விடுகிறார்கள்..
வா.. வா.. அதோ ஒரு பங்களாதேஷ் படகு தப்பிச் செல்லுகிறது.


நவீன், துடுப்புப் போடும் சத்தம் — கேட்கிறதல்லவா? இருட்டில் உற்றுப் பார். விளக்கை அணைத்த மறந்தது விபரீதமாகி விட்டது. நம் படகை நோக்கித்தான் வருகிறார்கள் விரோதிகள்.
பயப்படாதே ரஹீம். படகில் துப்பாக்கி, குண்டு எல்லாமிருக்கிறது. வருபவர் யாரானாலும் எத்தனை பேரானாலும் எதிர்த்துப் போராடுவோம்.
அதை விடச் சுலபமான வழி இருக்கிறது. என் ராணி அதைச் செய்வாள். இல்லையா ராணி..
ஒரு கைக் குண்டை ராணியிடம் கொடுத்துப் பறந்து போய் அவர்கள் படகினுள் போடும்படி பணித்தான் ரஹீம். கிளியும் காரியத்தைக் கச்சிதமாக முடித்தது....
பயல்கள் படகோடு பரலோகம் போய் விட்டார்கள்.
ராணி செய்த வேலை எப்படிப் பார்த்தாயா நவீன்...
வெடிச் சத்தம் விரோதிகளுக்கு நம் இருப்பிடத்தைக் காட்டிக் கொடுத்திருக்கும். ஆகவே இங்கிருந்து நாம் விரைவில் தப்பி வேறு இடம் போய் விடவேண்டும்...
ஆனால் இயற்கை வேறு விதமாக முடிவு செய்தது. திடீரென்று கடல் கொந்தளித்தது. மின்னல் வெட்டியது. பெரிய பெரிய அலைகள் எழுந்து அந்த விசைப் படகை நோக்கி மோதின ....

தொடரும்..

சுதந்திர வாழ்க்கை!

ஜகந்நாதன்




மலையடிவாரத்தில் ஒரு சிற்றூர். அந்த ஊரிலிருந்த வண்ணானிடம் மந்தகதி என்று ஒரு கழுதை இருந்தது. மந்தகதிக்குக் காட்டிலுள்ள சந்திரகேது என்ற ஒரு முயலிடம் சிநேகம் ஏற்பட்டது. ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் மந்தகதி காட்டுக்குச் சென்று சந்திரகேதுவிடம் பேசிக் கொண்டிருக்கும். சந்திரகேதுவுடன் புல்வெளிகளில் ஓடியாடித் திரிந்து மேய்ந்து கொண்டிருக்கும். நாளாக ஆக, மந்தகதிக்குக் காட்டு வாசத்தில் மோகம் ஏற்பட்டது. சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. ஆனாலும் அதற்குக் காட்டுக்குள் நிரந்தரமாக வந்துவிடவும் பயம். காட்டில் உள்ள கரடியையும், கழுதைப் புலியையும், யானையையும் பார்க்கும்போதே அதற்குக் குடல் நடுக்கம் எடுத்து விடும். மேலும் பிரியமான எசமானைப் பிரிந்துவிடவும் அதற்கு மனமில்லை.

ஒரு நாள் மந்தகதி தன்னுடைய குறையைச் சந்திரகேதுவிடம் சொல்லி அழுதது. சந்திரகேதுவுக்கும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுத்தானிருந்தது. அது கூறியது: ''அண்ணா! இந்தக் காட்டுக்கு அப்பால் ஒரு மந்திரவாதி இருக்கிறான். அவனிடம் சென்று நாம் யோசனை கேட்போம்.''

இரண்டும் மந்திரவாதியிடம் போய்ச் சேர்ந்தன. கழுதையின் ஆசையைக் கேட்டதும் அவன் சொன்னான்: ''உன்னுடைய ஆசையும் நியாயம்தான். எஜமான விசுவாசம் பாராட்டக்கூடியதே. உங்கள் இருவருடைய உருவத்தையும் மாற்றி விடுகிறேன். ஒரே ஒரு நாளைக்கு மட்டும் நீங்கள் இந்த மாற்றுருவத்துடனிருந்து விட்டு என்னிடம் வாருங்கள். அப்புறம் யோசிக்கலாம்.''

இரண்டும் சம்மதித்தன. மந்தகதிக்கு முயல் உருவம் கிடைத்தது. சந்திர கேது கழுதையாக மாறிற்று. இரண்டு பிராணிகளுக்கும் சந்தோஷம் தாளவில்லை. வழி நெடுக, மந்தகதி எஜமானனுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சந்திர கேதுவிடம் சொல்லிக் கொண்டே வந்தது. ''என்னுடைய எஜமானன் நல்லவன். சந்தைக்குப் போகும் தினத்தில்தான் கொஞ்சம் கடுமையாக இருப்பான். நாளைக்குத்தான் சந்தை. அவன் உன்னை அடிக்கும்படி வைத்துக் கொள்ளாதே. வாயால் அவன் உத்தரவிடும்போதே சொன்னதைக் கேட்டுவிடு. சந்தையிலே உனக்கு எள்ளுப் புண்ணாக்கும் கடலைப் பொட்டும் வாங்கித் தருவான். ஆகாகா! நினைக்கும்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது'' என்றெல்லாம் கூறியது.




மந்தகதி காட்டிய இடத்தில் தங்கிச் சந்திரகேது இரவைக் கழித்தது. மறுநாட் காலையில் வண்ணான் கழுதையின் மீது சலவைத் துணிகளை மூட்டை கட்டி



ஏற்றினான். கடை வீதியில் விற்பதற்காக வேறு சில பொருள்களையும் ஏற்றினான். முதுகிலே பாரம் ஏறியதும் சந்திரகேது வளைந்து கொடுத்தது. காதுகளை நிமிர்த்தி வெறித்துப் பார்த்தது. வண்ணானுக்குக் குஷி கிளம்பிவிட்டது.

''என்னம்மா சுமை அதிகமா? ஓட்டமும் நடையுமாகப் போனால் ஒரு நாழிப் பிரயாணம். எள்ளுப் புண்ணாக்கும் அகத்திக் கீரையும் தின்னலாம்'' என்று சொல்லித் தட்டியும் கொடுத்தான்.

சந்திரகேதுக்கும் குஷி கிளம்பிவிட்டது. மந்தகதி கூறிய எச்சரிக்கையும் ஞாபகத்துக்கு வரவே விருட்டென்று கிளம்பிற்று. துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிற்று. முதுகிலிருந்த சுமை



கீழே சரிந்ததும்தான் சந்திரகேதுவுக்குத் தன்னுடைய உருவத்தைப் பற்றிய எண்ணம் வந்தது. இதற்குள் வண்ணான் ''ஹோ ஹோ... முசக்குட்டி மாதிரிக் குதிக்கிறியே, என்னம்மா குஷி உனக்கு?'' என்று சொல்லிக் கொண்டே அதைப் பிடித்து இழுத்து வந்து மறுபடியும் பக்குவமாகச் சுமையை ஏற்றினான்.

'முசக் குட்டி' என்றதும் சந்திரகேதுவுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. மெள்ள மெள்ள நடந்தது. வண்ணானும் அதட்டிக் கொண்டே நடந்து வந்தான். சுமைப் பாரத்தினால் முதுகில் வலி எடுக்கவே, சந்திரகேதுவுக்குத் துள்ளிக் குதிக்க வேண்டும் போல் தோன்றிற்று.

அப்போது வண்ணான் சொன்னான்: ''போ அம்மா, கொஞ்சம் ஓட்டம் காட்டு; வெயில் ஏறி விட்டதே.''

சந்திரகேது துள்ளல் நடை போட்டது. ''பேஷ், பேஷ்! அரபிக் குதிரை போல ஓடுகிறாயே!'' என்று வண்ணான் தட்டிக் கொடுத்தான். சந்தையில் அன்று வேலை வெகு சீக்கிரம் முடிந்து விட்டது. வண்ணான் கழுதைக்கு எள்ளுப் புண்ணாக்கும் கடலைப் பொட்டும் வாங்கிப் போட்டான். அகத்திக் கீரை வாங்கி, குச்சியை ஆய்ந்து தன் கையினால் ஊட்டினான்.

பச்சைப் புல்லும் துளிர் இலைகளும் போல் ருசியாக இல்லாவிட்டாலும் சந்திரகேது ஆகாரத்தை விரும்பித் தின்றது. காலையிலிருந்து வயிறு காய்ந்து கொண்டிருக்கிறதல்லவா? வீடு திரும்பும்போது, முதுகில் கனமான பாரம் இல்லை. வண்ணான் ஏறி உட்கார்ந்து கொண்டான். ''ஓடிப் போ, அம்மா, என் ராஜாத்தி—அராபிக் குதிரை மாதிரி...'' என்றான்.

அவனுடைய வார்த்தை முடிவதற்குள் சந்திரகேது மெதுவாக நடக்கலாயிற்று.

வீடு வந்து சேர்ந்ததும் வண்ணான் அண்டை அயலாரிடம் சொன்னான்:— ''இன்னிக்கு என்னுடைய கழுதை சண்டித்தனமே செய்யவில்லை. குதிரையாட்டமா ஓட்டமும் நடையுமா வந்ததே, அதைப் பற்றி நான் சொல்லி முடியுமா? நீங்களே பார்த்து அனுபவிக்க வேண்டும்.''

அவனுடைய பெருமையைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரன் சொன்னான்:

''சண்டி தெளிந்து விட்டதா? அப்படி என்றால் நாளைக்கு என்னிடம் ஓட்டிவிடு. வீடு கட்டக் கொஞ்சம் செங்கல் வாங்கியிருக்கிறேன். நாலு நடையாகக் கொண்டு வந்து விடுகிறேன்.''

சந்திரகேதுவுக்கு இரவெல்லாம் தூக்கம் வரவில்லை. இரவில் நல்ல ஆகாரமுமில்லை. பொழுது விடிந்ததும் சுமை தூக்க வேண்டுமே என்று எண்ணும் போது, உடம்பு முழுதும் வலி எடுப்பது போலிருந்தது. பலபலவென்று விடியும் போது அது காட்டை நோக்கி ஓடிற்று.

ஊர்க் கோடியிலேயே மந்தகதியை அது சந்தித்து விட்டது. பயத்தினால் குழிந்த கண்ணும், ஒட்டிய வயிறுமாக அது நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் சந்திரகேது ''என்ன அண்ணா! சுகம்தானா?'' என்று கேட்டது.

மந்தகதிக்கு அழமாட்டாக் குறை. அது கூறியது: '''போதும் அப்பா, எனக்கு இந்தச் சுதந்திர வாழ்க்கை. இரவு முழுதும் கண் கொட்டவில்லை. நரி ஊளையிட்டால் கூட எனக்குக் குலை நடுக்கம் எடுக்கும். புலியும் ஓநாயும் வட்டமிடும்போது என்னால் தூங்க முடியுமா? புதரடியில் படுத்துக் கிடந்தாலும் சலசப்புக் கேட்டால் மனசு 'திக் திக்'கென்று அடித்துக் கொள்ளும். பகல் முழுவதும் புல்லைத் தின்றேன். காட்டிலே புல்லுக்கும் தண்ணீருக்கும் பஞ்சமில்லை. ஆனால் எள்ளுப் பிண்ணாக்கும் கடலைப் பொட்டும் அகப்படுமா? அந்த ருசிக்கு இணையாக இங்கே ஆகாரம்தான் உண்டா?''

இரண்டும் மந்திரவாதியிடம் போய் உருவத்தை மாற்றிக் கொள்ள நிச்சயித்தன. என்ன ஆச்சரியம்! அந்த எண்ணமே அவைகளுக்குச் சுய உருவைக் கொடுத்து விட்டன. ஒரு நாளைக்குத் தானே மந்திரவாதி அவைகளுக்கு மாற்றுருவத்தைக் கொடுத்திருந்தான்?

மந்தகதிக்கு மனச் சாந்தி ஏற்பட்டது. சந்திரகேதுவுடன் சல்லாபித்துக் கொண்டே சிறிது புல்லை மேய்ந்தது. அதற்கு வீட்டு நினைப்பு வந்து விட்டது. சந்திரகேதுவிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டை அடையும்போது உச்சிப் பொழுதாகி விட்டது.

வீட்டு வாசலில் வண்ணான் கோபத்துடன் நின்று கொண்டிருந்தான். கழுதையைப் பார்த்ததும் அவனுக்கு ஆவேசம் வந்து விட்டது. காலையில் இருந்து அதைத் தேடித் தேடி அலுத்துப் போயிருந்தான். பக்கத்து வீட்டுக்காரனுக்குச் செங்கலேற்றி வரக் கழுதையை அனுப்ப முடியாததால் அன்று அவனுக்கு ஒரு ரூபாய் வரும்படி இல்லாது போயிற்றே என்ற ஆத்திரம். பெரிய தடியை எடுத்துக் கொண்டு கழுதையை அடி அடி என்று அடித்து விட்டான.

மந்தகதிக்கு உடல் முழுதும் மரண வலி. இரவு எடுத்துக் கொண்டது. அன்று முழுவதும் ஆகாரம் சாப்பிட முடியாமல் அதைக் கட்டிப் போட்டு விட்டான் வண்ணான். பேச்சுக்குப் பேச்சு ''தடிக் கழுதை, நேற்று அராபிக் குதிரையைப் போல ஓடினாயே, இன்று சண்டிக் கழுதையாகி விட்டாயே? எனக்கு உன்னால் அவமானம் மட்டுமா? வரும்படியும் நஷ்டமாகி விட்டதே'' என்று சொல்லுவான். உடனே ஆத்திரம் தாளாமல் மறுபடி அதை மொத்துவான்.

முதல் நாள் என்ன நடந்தது என்று மந்தகதிக்குத் தெரியாது. சந்திரகேதுவிடமும் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. தன்னுடைய எஜமானன் மீது அதற்கு ஆத்திரம்தான் வந்தது. சந்திரகேது தவறான காரியம் ஏதும் செய்திருக்காது என்று மட்டும் அதற்கு நம்பிக்கை. முதுகில் வரி வரியாகத் தழும்பு ஏற்படும்படி அடித்து விட்டானே என்று எண்ணும்போது மந்திரவாதியிடம் ஓடிப் போக வேண்டும் என்றுதான் அதற்குத் தோன்றியது.

மறுநாள் காலையில் வண்ணான் கட்டு அவிழ்த்து விட்டான். ''பட்டினி போட்டேனே, கொட்டம் அடங்கிற்றா?'' என்று கேட்டான். மந்தகதி அவனை முறைத்துப் பார்த்தது. உடனே கனைத்துக்கொண்டே காட்டை நோக்கி ஓடிற்று. காட்டின் எல்லையிலேயே அது ஒரு குள்ள நரியைச் சந்தித்தது. ''அண்ணா! சௌக்கியம்தானா?'' என்று நரி கேட்பதற்குள் மந்தகதி தன்னுடைய கதையைச் சொல்லி அழுதது. நரி கூறியது: ''வா, அண்ணா! மந்திரவாதியிடம் சொல்லி நாம் இருவரும் உருவத்தை மாற்றிக் கொள்ளுவோம். ஒரே ஒரு நாளைக்குள் உன்னைக் கண்டால் உன் எஜமானன் நடுங்கும்படி செய்கிறேன்.''

மந்திரவாதி நரியைக் கழுதையாக்கினான். கழுதை நரியாயிற்று. உச்சிப் பொழுதுக்குள் புதுக் கழுதை கனைத்துக்கொண்டே வீடு திரும்பிற்று. அதைப் பார்த்ததுமே வண்ணான் ''வா, வா, என் ராஜாத்தி. ஒரு நடை உவர் மண் கொண்டு வந்து விடுவோம்'' என்று பக்கத்தில் வந்து தட்டிக் கொடுத்தான். ஊர் எல்லையை அடைந்ததும் கழுதை வண்ணானைப் பார்த்துச் சீறிற்று. அவன் மீது பாய்ந்து விழுந்து பிடுங்கிற்று.

வண்ணான் பயந்து போனான். தடியை எடுத்துக் கொண்டு அதை அடிக்க நெருங்கும்போது, உடம்பை வளைத்துக் கொண்டு கழுதை பாய்ந்து ஓடிற்று. வண்ணானுக்குப் பயம் பிடித்துக்கொண்டது. ஊரைப் பார்க்க வந்தான். கழுதையும் காட்டைப் பார்க்க ஓடிற்று.

மந்தகதி நண்பனை எதிர்பார்த்துக் கொண்டே கிடந்தது. நரி வேஷத்தில் புல்லைத் தின்ன முடியுமா? முயலையோ, வேறு ஜந்துக்களையோ வேட்டையாடவும் அதற்கு மனம் ஒப்பவில்லை. நரியைப் பார்த்ததும் ''என்ன விசேஷம்?'' என்று கேட்டது.

''நல்ல விசேஷம்தான். உன்னுடைய எஜமானன் இனிமேல் உன்னிடம் பிரியமாக இருப்பான்'' என்றது. அன்று முழுதும் மந்தகதி நரி வேஷத்திலேயே இருந்தது. மறுநாள் பொழுது விடியும்போது சுய உருவம் பெற்றதும் அது வயிறாரப் புல்லைத் தின்றது. உடனே வீடு நோக்கி ஓடிற்று. அதைப் பார்த்ததுமே வண்ணான் வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். கழுதை கனைத்தது. வண்ணான் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். கழுதை காதை நிமிர்த்திக் கொண்டு வாசற்படியையே பார்த்துக் கொண்டிருந்தது. அவன் பயம் தெளிந்து வெளியே வந்தான். கழுதையைத் தடவிக் கொடுத்தான். கழுதை சும்மா நின்று கொண்டிருந்தது. அவனுக்கு முதல் நாள் நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வரவே தடியை எடுத்து ஒரு போடு போட்டான். மந்தகதி நெளிந்து கொடுத்ததே தவிர, இடத்தை விட்டு அசையவேயில்லை. வண்ணானுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. தன்னுடைய கழுதைதானா என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தான். இருந்தாலும் அதை நம்பிக் குடித்தனம் செய்ய முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது.

அடுத்த சந்தைக்கு அதை ஓட்டிக் கொண்டு போனான் அவன். எள்ளுப் பிண்ணாக்கு தின்னும் ஆசையில் கழுதையும் வேகமாக ஓடிற்று. ''மெள்ள ஓடு'' என்றான் வண்ணான். கழுதை நின்றது. வண்ணான் ஓர் அடி கொடுத்தான். கழுதை நடந்தது.

சந்தையில் வண்ணான் அதை விற்றுவிட்டான். புது எஜமானன் கழுதையின் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துக் கொண்டு போனான். அன்று அதற்கு எள்ளுப் பிண்ணாக்கும் கிடைக்கவில்லை; வயிறு நிரம்ப ஆகாரமும் கிடைக்கவில்லை. வழிநெடுக அது தன்னுடைய சுதந்திர வாழ்க்கையை எண்ணி அழுதுகொண்டே போயிற்று.

வாழ்க்கை வரலாறு

நூல் நூற்கும் யந்திரம் கண்டவர்

'ஆள் பாதி ஆடை பாதி' என்பது ஒரு பழமொழி. ஒரு மனிதனுக்கு மதிப்பையும் மரியாதையையும் கொடுப்பது ஆடைதான். ஆனால் மகாத்மா காந்தி போன்ற ஒருசிலர் இதற்கு விதிவிலக்கு. எல்லாருமே மகாத்மாவாக முடியுமா? பருத்தியின் உபயோகத்தை முதன் முதலில் கண்டவர்கள் நாம். 'ஆடை காய்க்கும் செடி' என்று அந்நியர் பருத்தியின் உபயோகத்தை நம்மிடமிருந்து அறிந்து கொண்டார்கள். வெறும் பருத்தி ஆடையாகி விடாதே. நூல் நூற்றுத் துணி நெய்த பிற்குதானே உடை தயாரிக்க வேண்டும்?

மனிதன் ஆதியில் கையால்தான் நூற்றான், நெய்தான். துணிகளை வெட்டி ஒட்டிக் கைகளினாலேதான் தைத்தான். எல்லாமே கைகளால்தான். உழைப்பு உழைப்பு... உழைப்பால்தான் இன்று மனிதன் உயர்ந்திருக்கிறான். உழைப்புக்கு வேகம் ஊட்ட யந்திரங்களைக் கண்டுபிடித்தவனும் மனிதன்தான். இன்று நாம் அணியும் பெரும்பாலான துணிகள் யந்திரத்தில் நெய்யப்பட்டவை. (கைத்தறியும் இங்குண்டு.) பருத்தி, கம்பளிகளிலிருந்து யந்திரங் கொண்டு நூல் நூற்க முனைந்தவர்களில் சிறப்பான இடம் பெறுபவர் **சாமுவேல் கிராம்ப்டன்**. தொழிற் புரட்சியும் யந்திர யுகமும் பிறந்த காலத்தில் க்ராம்ப்டனுக்கு முன்னால் ஒரு சிலர் நூற்பு யந்



திங்களைக் காண முயன்று ஓரளவு வெற்றி கண்டாலும்கூட சாமுவேல் க்ராம்ப்டனே முழுமையான போற்றத்தக்க ஒரு யந்திரத்தை உருவாக்கியவர். அதற்காக இவர் பட்ட பாடு கொஞ்சமா?

மிகவும் ஏழைமையான குடும்பத்திலே பிறந்தவர் க்ராம்ப்டன். அவருக்கு ஏழு வயதிருக்கும்போது லங்காஷயரில் உள்ள போல்டன் நகரில் ஒரு மிகப் பழைய கட்டிடத்தின் ஒரு பகுதியில் இவர் குடும்பம் வாழ்ந்து வந்தது. இரண்டு மூன்று அறைகளிலே வாழ்ந்த அந்த நிலைக்கும் ஆபத்து வந்தது. சாமுவேலின் தந்தை காலமானார். ஆனாலும் தாயார் தன் மகனுடைய பள்ளிப் படிப்புத் தடைப்பட்டு விடக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தாள். எப்படியோ பாடுபட்டு மகனைப் படிக்க வைத்தாள்.

சாமுவேல் வளர்ந்து வாலிபனான போது அவனுடைய கவனம் சங்கீதத்திலே சென்றது. தனக்காக ஒரு வயலினைத் தானே செய்து கொண்டான். பிரார்த்தனை செய்யப் போகும் சின்னஞ் சிறிய சர்ச்சுக்கு ஒரு வாத்தியக் கருவியைச் செய்து கொடுத்தான். சங்கீதத்திலே ஈடுபாடு கொண்ட க்ராம்ப்டனுக்குத் திடீரென்று இயந்திரங்களில் கவனம் திரும்பியது. கையினால் நூல் நூற்கக் கஷ்டப்படுவதிலிருந்து மக்களுக்கு விடுதலை வழங்க நூல் நூற்கும் யந்திரத்தை உருவாக்குவதில் ஈடுபடலானான். க்ராம்ப்டனுக்கு 30 வயதான போது ஒரு புத்தம் புதிய யந்திரம் தயாராகிவிட்டது. இதற்கு 'ம்யூல்' என்று பெயர். பஞ்சைக் கொண்டு ஒற்றைச் சக்கரம் கொண்ட ஒரு (ராட்டை மாதிரி) கை இயந்திரத்தினால் நூல் நூற்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது. இந்த ம்யூல் இயந்திரம் முன்னும் பின்னும் இயங்கக் கூடியது. 1780ம் ஆண்டில் தமது புதிய யந்திரத்தைக் கண்டுபிடித்த க்ராம்ப்டன் 1790ம் ஆண்டுக்குள் அதில் பல மாற்றங்களைச் செய்து அபிவிருத்தி செய்தார்.

லங்காஷயரில் நூற்பு வேலை பலப் பல மடங்கு பெருகியது. இது க்ராம்ப்டன் கண்டுபிடித்த யந்திரத்தினால் தான். ஆனாலும் மக்களில் பெரும்பாலோர் இந்த மாதிரியான இயந்திரத்தை விரும்பவில்லை. ஏனென்றால் இந்த யந்திரங்கள் தாங்கள் கையினால் நூற்றுப் பிழைக்கும் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிடும் என்று பயந்தனர். இதனால் யந்திரத்தை எதிர்த்தார்கள். க்ராம்ப்டன் இவர்களுடைய கோபாவேசத்தினால் ரொம்பத் துன்பம் அடைந்தார். இவர் உருவாக்கிய இயந்திரங்களை யந்திரசாலைகளினுள் புகுந்து உடைத்து நொறுக்கி விட்டுப் போனார்கள். தங்கள் பழைய கை யந்திரத்துக்கும் கையால் நூற்பதற்கும் இனி மதிப்பு இருக்காது என்ற ஆத்திரத்தினால் ஏற்பட்ட செயல் இது. க்ராம்ப்டனின் வீட்டுக்குள் புகுந்து அவருடைய கண்டுபிடிப்புக்களைத் திருடிக் கொண்டு போகவும் முயன்றனர்.

க்ராம்ப்டனின் ம்யூல் யந்திரத்தின் முக்கிய அம்சம், அது மிகப் பெரியது, கனமானது. அதிக விலை உடையது. ஆகவே இதைத் தனி நபர் வாங்கவோ தங்கள் வீட்டில் நிறுவவோ முடியாது. இவர் காலத்துக்கு முன்பும் ஒருசில நூற்புத் தொழிற்சாலைகள் இருந்தன. ஆனாலும்ஜனங்களில் பெரும்பாலோர் தங்கள் வீட்டில் உட்கார்ந்தபடியே வேலை செய்து வந்தார்கள். கிராமங்களில் கையால் நூற்கும் ராட்டை இருக்கும். பருத்தி, கம்பளியை வீட்டிலிருந்தபடி நூற்று நெய்வதற்குத் தயாராக அனுப்பிவிடுவார்கள். சிலரிடம் தறியே கூட வீட்டில் இருக்கும். ஆடை நெய்தும்விடுவார்கள். எப்படியோ ஜனங்கள் வீட்டில் இருந்தபடியேதான் உழைக்க விரும்பினர். தொழிற்சாலைகளுக்குப் போய் வேலை செய்ய விரும்பவில்லை. க்ராம்ப்டனின் இயந்திரமோ தொழிற்சாலைகளில்தான் நிறுவக் கூடியது. ஆகவே ஜனங்கள் இதை வெறுத்து அழிக்க முற்பட்டனர். ஆனால் முடிவில் க்ராம்ப்டனின் யந்திரம் எல்லாருக்கும் நன்மையே செய்தது. எப்படி? க்ராம்ப்டனின் யந்திரம் தரமான துணிகளைத் தயாரிக்க உதவியது. அது விலை மலிவானதாகவும் இருந்தது. அது மட்டுமா? வேலை செய்ய வெளியே போக வேண்டும் என்ற பழக்கத்தையும் அனேகர் ஓரிடத்தில் கூடி உழைக்கும் பழக்கத்தையும் கூட க்ராம்ப்டனின் யந்திரம் உண்டாக்கியது.

க்ராம்ப்டனின் ம்யூல் உலகம் முழுவதும் பரவியது. இன்று க்ராம்ப்டனின் ம்யூல்களுக்குப் பதிலாக நவீன யந்திரங்கள் உருவாகி விட்டாலும்கூடப் பல்லாயிரம் ம்யூல்கள் இன்றும் உலகில் புழக்கத்தில் உள்ளன.

தொழிற் புரட்சி யுகத்துக்குத் தெம்பூட்டிய சாமுவேல் க்ராம்ப்டன் தம் வாழ்நாளில் பலவித ஏமாற்றங்களையும் தொல்லைகளையும் அடைந்தார். இவர் கண்டுபிடித்த யந்திரத்தினால் மற்றவர்கள் பொருளும் வசதியும் அடைந்தார்கள். க்ராம்ப்டன் வறுமையிலேயே உழன்றார். இவர் இறப்பதற்கு முன்னால் தான் இவரை அரசாங்கம் கௌரவித்தது.

வீகேயெம்



ஜோதிடம் பார்க்கப் படும்
ஜோசியர்: இப்படிப் படிக்காமல் ஊரைச்
ற்றிக் கொண்டு இருக்கிறாயே நீ, பாஸ் பண்ணு
வாயா!
மகன்: என்னைப் போய் இதுக்கெல்லாம்
ங்க ஜோஸ்யம் கேக்கிறீங்களே!
டாக்டர்: உன் முதுகு வலிக்கு ஆயின்ட்மெண்ட் தரேன். யாரையானும் விட்டு நன்னாத் தேய்க்கச் சொல்லு...!
சிரிக்கச் சிரிக்க...
சாமா
விருந்தாளி: என்னடா அம்பி! ஒவ்வொரு இலையாகத் தேடறே?
அம்பி: வெங்காய சாம்பார்லே என் கண்ணாடி கோலிக்குண்டு ஒண்ணு விழுந்துடுத்து, மாமா...!
“ஏண்டா, பசங்களா! தலை தெறிக்க ஓட
றன்?”
“என்ன பண்ணறது? எங்க வீட்டு அலாரம்
டிகாரம் ஓடலே, இப்போ நாங்க ஓடறோம்!”
“ஆமையாரே! கடைசியிலே உங்களுக்கு ஏத்த உத்தியோகமாகக் கிடைச்சுட்டது போலி
ருக்கே?... பலே!”

கால் பந்தாட்டம்

கிருஷ்ணவேணி

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் ஜெர்மனியில் உள்ள மியூனிக்கில் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் சில பிரபல விளையாட்டுக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவோமே. உதை பந்தாட்டமான 'ஃபுட்பால்' உங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடித்தமான 'கேம்' ஆயிற்றே. இது தோன்றியது எப்போது எங்கே என்று தெரியுமா உங்களுக்கு? பந்தாட்டம் நம் பாரதத்தில் பண்டைக் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது. பூப் பந்தாட்டம் பெண்களின் விளையாட்டு. இதே போல உலகின் பல பகுதிகளிலும் பந்தாட்டம் பழக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால் காலால் உதைத்து உருட்டும் பந்தாட்டம் — அந்தப் பந்து தோலால் ஆனதாகவும் அதை ஒரு குறிப்பிட்ட இடத்துக்குள் உருட்டித் தள்ளும்படியான ஆட்டத்தை முதன் முதலில் ஆடியவர்கள் சீனர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் 'ஸோ ரூ' என்பதாக ஒரு விளையாட்டைச் சீனர்கள், மன்னரின் பிறந்த நாளின்போது இரண்டு கட்சிகளாகப் பிரிந்து நின்று ஆடியிருக்கிறார்கள். ஒவ்வொரு கட்சியின் 'பிட்ச்'சிலும் முப்பது அடி உயரமுள்ள இரண்டு மூங்கில் கம்பங்கள் நடப்பட்டிருந்தன. இக்கம்பங்களைப் பட்டினால் பின்னப்பட்ட வலை கொண்டு பிணைக்கப்பட்டிருந்தது. இந்த வலையின் இடையே ஓரடி இடைவெளி இருந்தது. இந்த 'ஸோ ரூ' ஆட்டத்தின் குறிக்கோள், தோலினால் செய்து உள்ளே துணி, பஞ்சு ஆகியவைகளைக் கொண்டு திணித்து உறுதியாக்கப்பட்ட பந்தை உதைத்துப் பட்டு வலையின் ஓரடி இடைவெளிக்குள் செலுத்த வேண்டும். இதுவே 'கோல்' எனப்பட்டது. வெற்றி பெற்ற கட்சிக்குப் பரிசாக, மலர், மது, வெள்ளிக் கோப்பைகள் வழங்கப்பட்டன. தோல்வியடைந்த கட்சியின் தலைவனுக்குச் சாட்டையடி! இதுதான் சீனாவில் ஆடப்பட்ட பந்தாட்டம்!



மத்திய காலத்தில் இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் பக்கத்துப் பக்கத்துக் கிராமத்து ஆட்டக்காரர்கள் உதை பந்தாட்டம் ஆடினார்கள். இரு கட்சிகளிலும் எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஓடைகளும், வேலிகளுமே 'கோல்'களாக விளங்கின. சில சமயங்களில் கோல்களுக்கிடையே உள்ள தூரம் ஒரு மைல் இரண்டு மைல்கள்கூட இருக்குமாம். தெருக்களில் கூட்டமாகக் கூடி முழங் கையால் தள்ளியபடி இடித்துக் கொண்டும் விழுந்தும் புரண்டும் பந்தை உருட்டிக் கொண்டு போவார்கள். விதிமுறைகள்

எதுவும் கிடையாது. ஆரம்ப காலங்களில் எப்படியோ எந்த வகையிலாவது பந்தை எதிர்த்தரப்பினரின் கோலுக்குள் தள்ள வேண்டியது. இங்கிலாந்து மன்னர்கள் இந்த உதை பந்தாட்டத்தை விரும்பவில்லை. இளைஞர்களை வில்வித்தை பயில்வதிலிருந்து இந்த ஆட்டம் தன்பால் இழுத்துக்கொண்டு விட்டதே என்று மன்னர்களுக்கு மனத் தாங்கல். உதை பந்தாட்டத்துக்குத் தடை விதித்தும் பலன் ஏற்படவில்லை.

ஆதி காலத்தில் உதைபந்தாட்டம் தெருக்களில்தான் ஆடப்பட்டன. மைதானம் கிடையாது. ஒவ்வொரு ஷ்ரோவ் செவ்வாய்க் கிழமைகளிலும் இங்கிலாந்திலுள்ள முக்கியமான நகர வீதிகள் கால் பந்தாட்டக்காரர்களின் ஆளுகையில்தான் இருக்கும். போக்குவரத்துக்கள் திருப்பிவிடப்படும். கடைக் கதவுகள் ஜன்னல்கள் சாத்தப்படும். விளையாடுபவர்களின் உடலில் நிறைய அடி, காயம் ஏற்படுமாம். சில சமயங்களில் எலும்பு முறிவும் உண்டாம். அவ்வப்போது உயிருக்கேகூட அபாயமாகிவிடுமாம்.

நூறு வருஷங்களுக்கு முன்பு ஆங்கிலப் பள்ளி மாணவர்களின் விருப்பமிக்க விளையாட்டாயிற்று, கால்பந்தாட்டம். ஒவ்வொரு பள்ளியும் கால் பந்தாட்டத்தில் தங்களுக்கெனத் தனியான விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டன. 'பிட்ச்'சின் அமைப்பும் அளவும் விதம் விதமாக இருந்தன.

ஆகவே கால்பந்தாட்டக் கழகங்கள் எல்லாம் 1863ல் லண்டனில் ஒன்று கூடின. கால்பந்தாட்டத்துக்குப் பொதுவான விதிமுறைகளை வகுத்தன. கழகங்கள் (கிளப்ஸ்) தங்களுக்குள் கால் பந்தாட்டச் சங்கங்களை அமைத்துக்கொண்டன (ஃபுட்பால் அசோஸியேஷன்). ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளின்படி இந்தச் சங்கங்கள் ஆடிய ஆட்டங்களை அசோஸியேஷன் ஃபுட்பால் என்று அழைத்தார்கள். இம்முறை பல நாடுகளுக்கும் பரவலாயிற்று. 1873ல் ஸ்காட்லாந்து கால் பந்தாட்டச் சங்கம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 1876ல் வேல்ஸிலும் 1880ல் அயர்லாந்திலும் சங்கங்கள் ஏற்பட்டன. ஐரோப்பாவில் முதலில் பிரான்ஸிலும் பிறகு நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்விட்ஜர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளிலும் கால்பந்தாட்டச் சங்கங்கள் ஏற்பட்டன. 1904ல் இந்த ஐந்து தேசங்களும் சேர்ந்து கால் பந்தாட்டச் சங்கங்களின் பெடரேஷனை உருவாக்கின. (I.F.F.A.)

ஆரம்பத்தில் கால்பந்தாட்டச் சங்கங்கள் ஆடிய விளையாட்டுக்கள் பொழுதுபோக்குக்காகவே இருந்தன. யாருக்கும் எவ்வித ஊதியமும் கிடையாது. இவர்கள் 'அமெச்சூர்'கள். 1871ம் ஆண்டில்தான் போட்டி ஆட்டங்கள் ஆரம்பமாயின. 'ஸில்வர் சாலன்ஜ் கப்'புக்காக முதன் முதலில் ஆடினார்கள். பதினைந்து கழகங்கள் இதில் பங்கு கொண்டன. லண்டனில் உள்ள கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் ஆடிய ஃபைனல் ஆட்டத்தைக் காண வந்தவர்கள் 2000 பேர்கள் தான். ரயில் என்ஜினியர் சங்கத்தை 'வாண்டரர்கள்' தோற்கடித்தார்கள், ஒரு கோல் போட்டு.

1885ம் ஆண்டிலிருந்து கால்பந்தாட்டம் தொழில் துறை ஆட்டமாகியது. ஆட்டக்காரர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது. எல்லோராலும் விரும்பிப் பார்க்கும் விளையாட்டாக உருவாகியது. பெரிய நகரங்களில் உள்ள கால்பந்தாட்டக் கழகங்கள் பழைய பாணியில் பொழுது போக்குக்காக ஆடுவதோடு மட்டும் திருப்தியடையவில்லை. 1888ல் இம்மாதிரிக் கழகங்கள் பன்னிரண்டு ஒருங்கிணைந்து ஃபுட்பால் லீக்கை உருவாக்கிற்று. இவை ஒன்றுக்கொன்று 'சாம்பியன் ஷிப்பு'க்காக விளையாடுவது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

இப்படியாகக் கால்பந்தாட்டத்தின் விதிமுறைகளும் ஒழுங்கும் கட்டுப்பாடும் வளர வளர உலகெங்கும் இந்த ஆட்டம் பரவிப் பாப்புலராயின. இதுதான் உதைபந்தாட்டத்தின் கதை.



கால்பந்தாட்டக்காரர்களின் உடைகள் காலப்போக்கில்....





☐ நகை அணிவதில் நாட்டம்



☐ மாடுகளே செல்வம்



☐ குடிசையும் குடும்பமும்

சிங்கத்தின் பிடரி பரிசு பெறும் வீர இனம்

உலகில் இன்று அதிகமான ஆதிவாசிகள் வாழும் இடம் ஆப்பிரிக்காதான். பரந்து கிடக்கும் அந்த இருண்ட கண்டத்துக்குள் பலவிதமான நாகரிகங்களையும் பழக்க வழக்கங்களையும் கொண்ட பல்வேறு இன மக்கள் வாழுகிறார்கள். இங்கே நீங்கள் காணும் இனத்தவர் கென்யா, தங்கனிகா ஆகிய பிரதேசங்களின் சமவெளியில் வாழும் போர்க் குணமுடைய மக்கள். இவர்களை மாஸாய் என்று அழைப்பார்கள். ரொம்பக் கொடூர குணமுடையவர்கள். சிறந்த போர்வீரர்கள். கிழக்கு ஆப்பிரிக்காவின் கொடுங்கோலர்கள் என்றுகூட இவர்களுக்கு ஒரு பெயர் உண்டு. அண்டை அயல் இன மக்களைத் தாக்கி அவர்களுடைய கால்நடைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு போய் விடுவார்கள். வெள்ளையர்களின் வரவுக்குப் பிறகு இந்த இன மக்களின் போர்க் குணம் அடங்கி யிருக்கிறது. வெளிர்க் காவி நிறத்தோடு கூடியவர்கள். கம்பீரமான தோற்றம். கென்யாவில் இன்னொரு இனத்தவரும் வாழ்கிறார்கள். இவர்களுக்குக் 'கிக்குயூ' என்று பெயர். அரசியலில் நாட்டமுள்ளவர்கள் இந்தக் கிக்கியூ இனத்தவர். ஆனால் மாஸாய்களுக்கு அரசியலில் அதிக நாட்டம் கிடையாது. அதுமட்டுமல்ல; வெள்ளையர்களின் வாழ் முறையில் வெறுப்பும் உடையவர்கள் மாஸாய்கள். எல்லாரையும் விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணமும் தங்கள் பூர்வீக இனத்துக் கோட்பாடுகளைக் கட்டுப்பாடுடன் கடைப்பிடிப்பதில் கர்வமும் கொண்டவர்கள். இவர்களோடு இன்னும் இரண்டு இனத்தவர் வாழ்கிறார்கள். குனோனோ (Kunono) தோரபோ (Dorobo) என்பது இந்த இனத்தவர்களின் பெயர்கள். மாஸாய்களுக்கு வேலை செய்து வாழ்கிறார்கள். ஆகவே இவர்களைக் கீழ்ப்பட்டவர்களாகக் கருதுகிறார்கள் மாஸாய்கள்.

மஸாய் இனத்து வீரன் தலையணி, சிங்கத்தின் பிடரி மயிரினால் ஆனது. அதை அப்படியே பாடம் செய்து தங்கள் தலையில் அழகாக அணிந்து கொள்ளுகிறார்கள். எருமைகளின் தோலினால் ஆன கேடயங்களை வைத்திருப்பார்கள். மாஸாய் வீரர்களுக்கு மோரான் என்று பெயர். கால்நடைகளுக்கு ஊறு விளைவிக்கும் சிங்கம் சிறுத்தைகளை வேட்டையாடுவதே இவர்களின் வீர விளையாட்டு. சிங்கத்தின் மீது யாருடைய ஈட்டி முதலில் பாய்கிறதோ, அல்லது யார் ஒருவன் சிங்கத்தின் வாலைப் பற்றி இழுத்து அதை வெற்றி கொள்கிறானோ அவனுக்கு மிகவுயர்ந்த பரிசாக அந்தச் சிங்கத்தின் பிடரியையே அளித்துவிடுவார்கள். மாஸாய் இனத்தில் மோரான்


களின் ஆதிக்கம்தான் அதிகம். வீரர்களாக்க அளிக்கப்படும் பயிற்சி ரொம்பவும் கட்டுப்பாடானது. பதின்மூன்று வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கே வீரர் பயிற்சி அளிக்கப்படும். பதினேழாம் வயதில் மோரானாக்கப் படுவார்கள். வீரர் படையில் சேர்ந்தாலும் கூட நான்கு வருஷங்களுக்குப் பிறகு விசேஷமானதொரு சடங்கு வைத்து அதில் வீர விருது வழங்கப்பட்ட பிறகே அவனை வீரனாக மதிப்பார்கள். இதன் பிறகே அந்த வீரன் மணம் செய்து கொள்ளும் தகுதியையும் அடைகிறான். கால்நடைகளின் பாலும் இரத்தமுமே இவர்களின் பயிற்சிக் கால உணவு. அபூர்வமாக எப்போதாவது உணவுக்காக் வேட்டையாடுவதும் உண்டு. வீரனுக்கும் பயிற்சி இத்தனை கட்டுப்பாடும் கஷ்டமுமானதால் இவர்கள் சிறந்த போர்வீரர்களாக விளங்குகிறார்கள். இவ்வினத்தவர்களின் செல்வம் மாடுகள்தான். வயோதிகர்களும் பையன்களும் மாடுகளை மேய்ப்பார்கள். காளைகளின் வளைந்த கொம்புகளும் திமிலும் எல்லாவற்றையும் விட மிக மிக உயர்ந்த பொருளாகக் கருதப்படுகிறது. இவைகளை உடையவர்களுக்கு இதைக் கொண்டே பட்டப் பெயர்களும் உண்டு. பெருகிவரும் ஏராளமான மாடுகளையும் பசுக்களையும் பாதுகாக்க வறண்ட இந்தப் பிரதேசத்தினால் முடியவில்லை. இதனால் தங்கள் மாஸாய் இனம் அழிந்து போவதிலிருந்து நிவாரணம் பெற நீர் விநியோகத்துக்கான நவீன வசதிகளை ஏற்கும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர் மாஸாய்கள். 'தூக்க வியாதி' என்ற ஒருவகை நோய் ஒருவகை ஈக்களால் பரவுகிறது. இதைத் தடுக்கவும் நவீன மருத்துவத்தின் உதவியை இப்போது இவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இவர்களின் குடிசை வீடுகள் முட்டை வடிவிலானது. 'பிரஷ்வுட்' என்ற ஒருவகை மரத்தினால் அமைத்து மண் கொண்டு பூசி இருக்கும். குடிசைகளைக் கிராமத்தில் ஒரு வட்டத்துக்குள் அமைத்துக் கொள்ளுகின்றனர். எல்லாக் குடிசைகளையும் சுற்றி இதே பிரஷ்வுட்டினால் வேலியும் அமைப்பார்கள். மாஸாய் வீரர்களுக்குப் பல மனைவிகள் உண்டு. ஒவ்வொரு மனைவியும் தன் குழந்தைகளோடு ஒரு தனிக் குடிசையில் வசிப்பாள். ஒரு குடும்பம் பல குடிசைகளைக் கொண்டதாக இருக்கும். வாலிபர்களை வீரர்களாக்கும் சடங்கு ஏழு வருஷங்களுக்கு ஒரு முறை நிகழும். இதற்கு உனடோ (Unoto) என்று பெயர். இதற்காக ஒரு விசேஷக் கிராமம் பெண்களால் நிறுவப்படும். சடங்கு மண்டபத்தைச் சுற்றி வட்டமாக வீரராக்கும் வாலிபர்களைக் கொண்ட குடும்பங்கள் தங்குவதற்கு 160 குடிசைகள் அமைக்கப்படும்.

மாஸாய் இனத்துப் பெண்கள் நகைகள் அணிவதில் விசேஷ ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள். பெரிய பெரிய அளவில் பலவிதமான காதணிகளையும், வளையல்களையும், மாலைகளையும் அணிவார்கள். பெண்கள் காலுக்குச் செருப்பும் அணிவார்கள். பெண்களின் ஆடை ஆட்டுத் தோலால் ஆனது. ஆடவர் அணியும் — காலிகோ — முரட்டுப் பருத்தி ஆடை இறக்குமதி செய்யப்படுகிறது.

ஐரோப்பியர்களின் வருகை அதிகமாகி இருந்தாலும் வெள்ளையர்களுக்கு வேலை செய்வதை மாஸாய்கள் விரும்புவதில்லை.





சீமாத் தாத்தாவுக்கு எண்பது வயது முடியப் போகிறது. அதைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டார்கள் சுண்டுவும் குண்டுவும். "தாத்தா! உங்களை எல்லோரும் 'பெரிய கஞ்சன், காலணாச் செலவழிக்க மாட்டார்' என்று சொல்லுகிறார்கள். அதை இந்தச் சமயத்தில் பொய்யாக்கிக் காட்ட வேண்டும். உங்களுக்குத் தெரிந்த அத்தனை பேரும் உங்களுடைய சதாபிஷேகத்தில் கலந்து கொள்ள வேண்டும். விருந்தும் பிரமாதமாக இருக்க வேண்டும். வருபவர்கள் எல்லோரும் உங்களை 'சீமாத் தாத்தாவா கொக்கா?' என்று பாராட்ட வேண்டும்" என்று தாத்தாவுக்கு ஐஸ் வைத்தார்கள். சீமாத் தாத்தாவும் தம் எண்பதாவது பிறந்த விழாவை விமரிசையாகக் கொண்டாட ஒப்புக்கொண்டு அழைப்பிதழும் அச்சடித்தார்.


"பசங்களா! எல்லாவற்றையும் கவரில் போட்டுவிட்டேன். உங்களிடம் கொடுத்துள்ள 'லிஸ்ட்'படி எல்லோருடைய விலாசங்களையும் எழுதி ஞாபகமாக ஒவ்வொருவர் வீட்டிலும் சேர்ப்பித்துவிட வேண்டும். போஸ்ட் செய்வதையும் மறக்காமல்..." என்று தாத்தா முடிப்பதற்குள் "மறப்போமா? இது எங்கள் தாத்தாவின் விழா இல்லையா? நீங்கள் கவலையே படவேண்டாம். மற்ற ஏற்பாடுகளைக் கவனியுங்கள்" என்றார்கள் குண்டுவும் சுண்டுவும்.


தடபுடலாக ஏற்பாடுகள் நடந்தன. பந்து சமையற்காரர்கள் முதல் நாளே வந்து விட்டார்கள். ஏராளமான பேர் வருவார்கள் என்று சாமான்களை வாங்கிக் குவித்திருந்தார் சீமாத் தாத்தா. ஏற்பாடுகள் எல்லாம் எக்கச்சக்கமாக இருந்தன.

விடிந்தால் தாத்தாவுக்குச் சதாபிஷேகம். விடிந்தது. இட்டிலி, சாம்பார் வாசனை மூக்கைத் துளைத்தது. ஆனால், யாரையுமே காணோம். தாத்தாவுக்குத் திக்கென்றது. "முகூர்த்தத்துக்கு வந்து விடுவார்கள் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டார். நாழிகை ஓடிக் கொண்டிருந்தது. மேளக்காரன் ஜமாய்த்துக் கொண்டிருந்தான். ஆனால் ஜனங்களைக் காணோமே! அப்போதுதான் தாத்தாவுக்குச் சந்தேகம் தோன்றியது. "டேய் பசங்களா!" என்று தம் பேரப் பிள்ளைகளைக் கூப்பிட்டார். "அழைப்பிதழை எல்லாருக்கும் அனுப்பினேளா?" என்று கேட்டார். இருவர் முகமும் ஏன் அப்படிப் போகிறது என்று சீமாத் தாத்தாவுக்குப் புரியவில்லை. அதற்குள் குண்டுவும் சுண்டுவும் தாத்தாவின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார்கள். "எங்களை மன்னிச்சுடுங்கோ தாத்தா! கல்யாணக் களேபரங்களில் நாங்கள் அழைப்பிதழ்களைப் பட்டுவாடா செய்யவும் இல்லை, தபாலில் போடவும் இல்லை. மறந்து விட்டோம்" என்றார்கள்.

பாவம், தாத்தா! அவருக்குக் கோபம் அதிகமானால் பேச்சு வராது. இப்போதும் அப்படித்தான். எல்லாருக்குமே இந்த நிலை ரொம்பச் சங்கடமாக இருந்தது. இதற்குச் சுண்டுவும் குண்டுவுமே ஒரு பரிகாரம் சொன்னார்கள். "சாப்பாடு வீணாகிறதே என்றுதானே கவலை? விடுங்கள் கவலையை. ஊரில் உள்ள ஏழை எளியவர்களை இதோ ஒரு நொடியில் அழைத்து வருகிறேன். வயிறார உண்டு மனமார வாழ்த்துவார்கள்" என்றனர். சொன்னபடியே அரை மணியில் குடிசைவாசிகள் வந்து நிறைந்தனர். இப்படி யார் அவர்களை அழைத்து விருந்து வைக்கிறார்கள்? பந்தி விசாரணை செய்தார் சீமாத் தாத்தா. சுண்டுவும் குண்டுவும் விழுந்து விழுந்து உபசாரம் செய்து பரிமாறினார்கள். ஏழைகள் திருப்தியாக உண்டு மனம் குளிர "நீங்க மகராஜனா இருக்கணும் தர்மப் பிரபுவே!" என்று உளமார வாழ்த்திவிட்டுப் போனார்கள்.

தாத்தாவுக்குப் பரம திருப்தி. "பசங்களா, அழைப்பிதழ்படி வருபவர்கள் இப்படி எங்கே வாழ்த்துவார்கள்? சாப்பிட்டுவிட்டு, அந்தப்பக்கம் போய், இதில் உப்பு இல்லை, அதில் சர்க்கரை இல்லை என்று பேசிவிட்டுப் போவார்கள். உள்ளன்போடு கிடைத்த இந்த வாழ்த்து உங்களால்தான். அது சரி, நீங்கள் நிஜமாலுமே அழைப்பிதழைக் கொடுக்க மறந்தீர்களா அல்லது..." என்று கேட்ட சீமாத் தாத்தாவுக்குப் பதில் சொல்ல அங்கே சுண்டுவுமில்லை, குண்டுவுமில்லை!


பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
பாலுவின் அம்மாவைப் பார்க்க அவள் தோழி, தன் பிள்ளை கோபுவுடன் வந்திருந்தாள்.
என் பிள்ளை கோபு ரொம்ப சங்கோஜி. ஆனால் ரொம்பக் கெட்டிக்காரன்.
கெட்டிக்காரனுமே? பேசித்து மாதிரி இருக்கு. நம்மோட விளையாட வருவானா?
டேய்...டே...ய்...! என்ன காரியம்டா இது?
உன் "கிரிக்கெட் பாட்" உறுதியா இருக்கான்னு பாக்கறேன்.
ரொம்ப மட்டமானவன் நீ. உன் வேலைத்தனத்தை எங்கிட்டயா காட்டறே?
ஹா...வ்...!
என் பாட்டை உடைச்சதுக்கு இது தான் தண்டனை. காலையிலே தான் கரிக்காரன் வந்து அளந்து விட்டுப் போறான்.
என் உடம்பிலே கரியாக்கினில்லே? உன்னையும்... ஐயோ, பயல் குனிந்துகொண்டு விட்டானே!
பாலு! இதென்ன அநாகரிகமான விளையாட்டு? வெட்கமாயில்லே உனக்கு? மாடிக்குப் போ உன் ரூமுக்கு...ம்...!
கோபுக் கண்ணு! நீ வெளியிலே போய் வேறு யாரோடயா வது விளையாடு போ.


ஏண்டா மாடியிலே போயிப்பதுங்கிட்டே? 'தில்' இருந்தா கீழே இறங்கி வந்து பாரு.
பயல் எனக்கு ஏதோ கண்ணி வச்சிருக்கான்...ஆ...அதோ! இந்தக் கண்ணாடி மூலமா அதைக் கண்டு பிடிச்சுட்டேன். இதுக்கு ஒரு வழி பண்றேன்.
டேய், கோபு உன்னைச் சட்னியாக்கிடறேன் பா இப்போ! இந்தா இதை வாங்கிக்கோ, கும்மாக் குத்து! எப்படி...?
தம்...தம் ...டமார
கேட்டியாடியம்மா? உன் பிள்ளை என் குழந்தையைப் போட்டுக் கொல்றான், நான் போறேண்டியம்மா...
என் தந்திரம் பலித்துவிட்டது, சபாஷ்!
தூ...தூ...து..! ஐயையோ, இதென்ன கரிப்பொடி...கண்றாவி!
ஐயோ! வந்தது ஏ அம்மான்
கோபுக் கொழுந்தே! போயிட்டு வரயா? இன்னொரு நாளைக்கு வா...
அடிக் கழுதை வீட்டுக்கு வா, உன்னைப் பேச கறேன். இப்படியா என் மானத்தை வாங்குவே?...

தெரியுமா?

184 கிரிக்கெட் மட்டைகள் செய்யப் பயன்படும் மரத்தின் பெயர் என்ன?

185 மரங்களிலேயே உறுதியும் கனமுமற்ற மரம் எது?

186 செக்கோஸ்லேவேகியாவின் தலைநகர் எது ?

187 பிரிட்டனின் இரண்டாவது மிகப் பெரிய நகர் எது? முதல் நகர்: இலண்டன்.

188 பால்டிக் கடலையும் வடக்குப் பகுதியையும் இணைக்கும் கணவாயின் பெயர் என்ன?

189 பிரிட்டனில் மிக அதிகமான பிளாட்பாரங்களைக் கொண்ட ரயில் நிலையம் எது ?

190 பாஸ் ஜலசந்தியால் ஆஸ்திரேலியாவிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள தீவு எது ?

191 பறவைகளில் மிக வேகமாகப் பறக்கக் கூடியது எது?

192 வானவில்லின் ஏழு வர்ணங்கள் எவை?

193 மண் எண்ணெயைக் கண்டுபிடித்தவர் யார்?

194 யஹூதி மெனுஹின் என்பவருடன் தொடர்புடைய இசைக் கருவி எது ?

195 இத்தாலியின் மிகப் பெரிய தொழில் நகரம் எது?

196 பூகோள சாஸ்திரத்தின் தந்தை என்று யாரைக் கூறுகிறார்கள் ?

197 போலந்தின் முக்கிய நதி எது?

198 ஆர்கிமிடீஸின் தத்துவத்தை விளக்க முடியுமா?

199 மெதாடிஸ்ட் இயக்கத்தை ஸ்தாபித்தவர் யார்?

200 ஜெஸ்ஸூட்ஸ்களின் ஸ்தாபகர் யார் ?

201 நபிகள் நாயகம் பிறந்தது எங்கே ?

202 சன்லைட் துறைமுகம் எதற்குப் புகழ்பெற்றது? எங்குள்ளது ?

203 இன்று பிரபலமாக விளங்கும் ஒரு தேசம் முன்னொரு காலத்தில் 'காதே' (Cathay) என்று அழைக்கப்பட்டது. அது எந்தத் தேசம் ?

204 முதன் முதலில் ரயில்வே கால அட்டவணையை வெளியிட்டவர் யார் ?

205 நீங்கள் அருந்தும் பாலில் அடங்கியுள்ளது என்ன வைட்டமின் ?

206 இயேசுபிரானைக் காட்டிக் கொடுத்த சீடரின் பெயர் என்ன ?

207 ரேடியத்தைக் கண்டுபிடித்தது யார் ?

208 பல்கேரியாவின் தலைநகர் எது ?

209 மேரி க்யூரி எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

210 ஸீஸ்மோலஜிஸ்ட் (Seismologist) என்பவர் யார்?

211 'ஹைட்ரேட்டட் அலுமினியம் ஸிலிகேட்' — இது ஒரு பொருளின் ரசாயனச் சொல். இதற்கு வழக்கில் ஒரு பெயர் உண்டு. அது தெரியுமா ?

212 குடிநீரைச் சுத்தப்படுத்த ஒரு வாயு பயன்படுகிறது. அதன் பெயர் என்ன?

தெரியுமே!



விடைகள்: 184. வில்லோ. 185. பால்ஸா. 186. ப்ரேக். 187. பர்மிங்ஹாம். 188. கீல் (Kiel). 189. வாட்டர்லூ. 190. டாஸ்மேனியா. 191. (கோல்டன்) தங்கக் கழுகு. 192. சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், நீலச் சிவப்பு (இண்டிகோ) ஊதா. 193. சாம்கியர் (Sam Kier) 194. வயலின். 195. மிலான். 196. தோலமி. 197. விஸ்டுலா. 198. ஒரு பொருளை நீரினுள் அமுக்கினால் அதன் நிறை எதுவானாலும் அப்பொருளின் கன பரிமாணமுள்ள நீர் வெளியேறும், இதுவே ஆர்கிமிடீஸின் தத்துவம். 199. ஜான் வெஸ்லே. 200. ஸெயின்ட் இக்னேஷியஸ் லயோலா. 201. மெக்காவில். 202. சோப்புக்கு. 203. சீனு 204. ஜார்ஜ் ப்ராட்ஷா. 205. விட்டமின் 'ஏ'. 206. ஜூடாஸ் இஸ்காரியட். 207. மேரி க்யூரி. 208. சோபியா. 209. போலந்து நாட்டை. 210. பூமியின் அதிர்வுகளை ஆராய்பவர். 211. களிமண். 212. க்ளோரின்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி'-அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்


பாதி வேலையைத்தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோஅமிலம் அதில் அடங்கியுள்ளது.
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்கிரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் –10 மிலி.
Incremin drops
Lysine · Vitamins
10 ml.
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
லின்டாஸ்-INC. 20.690 TM